S. D. M. Series 14.

# VAYADI VAMBAN

A Comical laugh producing wonderful Tamil Novel

BY

T. RANGASAWMY NAIDU

கமலா வாசக நிலையம்
து. ரெங்கநாதபுரம்
வரிசை நெ. 1076.
பகுதி நெ. 9 14

PRINTED & PUBLISHED BY
S. DURAISAWMI MUDALIAR
AT HIS
SRI "BHARATHI" PRESS, CHOOLAI, MADRAS.
1941

Re [Price As. 4

# இனிய தமிழ் நாவல்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கமலவல்லி அல்லது கன்னியின் சமர்த்து 2-பாகமும்... | 3 | 4 | 0 |
| ஷை பாகம் 1-க்கு ... | 1 | 12 | 0 |
| சரோஜனி ஓர் இனிய துப்பறியும் தமிழ் நாவல் ... | 1 | 8 | 0 |
| இளங்கோவன் அல்லது தவளமலைச் சுரங்கம் ... | 1 | 4 | 0 |
| தலைவாங்கி அபூர்வசிந்தாமணி ... | 1 | 0 | 0 |
| சௌந்தராபாய் அல்லது சதிகொலை ... | 1 | 0 | 0 |
| இருகொலைகளின் இரகசியம்; இது ஓர் துப்பறியும் நாவல் | 1 | 0 | 0 |
| ஆனந்த கதாசாகரம் அல்லது அற்புத விநோதக் கதைகள் | 1 | 0 | 0 |
| ராமாமணி ஓர் குடும்ப நாவல் ... | 1 | 0 | 0 |
| தலைவெட்டி தயாபரசுந்தரி ஓர் அற்புதக் காதற்களஞ்சியம் | 0 | 12 | 0 |
| மலையாளமீனாள் அல்லது பொன்மலைப்புதுமை ... | 0 | 12 | 0 |
| வசீகரன் அல்லது அடிமையாலடைந்த அரசின் சுதந்திரம் | 0 | 12 | 0 |
| மோஹன் சிங் அல்லது குடும்ப கொலையின் இரகசியம் | 0 | 12 | 0 |
| பங்கயச்செல்வி அல்லது பதிவிரதாசிரோமணி ... | 0 | 12 | 0 |
| விவேகாநந்தபோதம் அல்லது வைதீக வேதியர் ... | 0 | 10 | 0 |
| ஆனந்தரங்கன்; ஓர் நூதன துப்பறியும் நாவல் ... | 0 | 10 | 0 |
| புவனராணி அல்லது பூவையர் பூஷணம் ... | 0 | 8 | 0 |
| கற்பகவல்லி ஓர் அதிசயக்கதை ... | 0 | 8 | 0 |
| ஜயலட்சுமி அல்லது கஷ்டத்தின் சுகம் ... | 0 | 8 | 0 |
| தனபதி: கணவனைப்பிரிந்த காதலியின் விந்தை ... | 0 | 8 | 0 |
| சுகுணசுந்தரி அல்லது காதலின் அழகும், கற்பின்சிறப்பும் | 0 | 8 | 0 |
| மோகனவல்லி: ஓர் இன்பரசக் கதை ... | 0 | 6 | 0 |
| பூபாலன் புவனசுந்தரி: ஆகாய விமானத்தின் அதிசயம் | 0 | 6 | 0 |
| மதனமனோகரி: கற்பனையலங்காரக் கதை ... | 0 | 6 | 0 |
| தடிராமன்: இஃது ஓர் அகடவிகட ஆனந்தக் கதை ... | 0 | 6 | 0 |
| சுந்தராம்பாள்: அதிக வியப்பைத் தரக்கூடிய நாவல்... | 0 | 6 | 0 |
| வாயாடி வம்பன்: ஓயாத சிரிப்பைத்தரும் ஓர் நவீனக்கதை | 0 | 4 | 0 |
| தங்கவேணி: ஓர் அற்புதக் கதை ... | 0 | 4 | 0 |
| நாட்டுப்புரத்தான் நகரப்பிரவேசம் ... | 0 | 4 | 0 |
| நாட்டுப்புரத்தான் நகரவாசம் ... | 0 | 4 | 0 |

## பாடசாலை மாணவர்களுக்கான தமிழ் புத்தகங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஜீமூதவாகனன் | 0 | 8 | 0 | நாயன்மார் சரித்திரம் | 0 | 8 | 0 |
| உத்தரகுமாரன் | 0 | 8 | 0 | முப்பெருந் தொண்டர் | 0 | 8 | 0 |
| மனுச்சோழன் | 0 | 8 | 0 | முத்துக்குமரன் | 0 | 5 | 0 |
| தசமுகன் | 0 | 8 | 0 | அவ்வை | 0 | 5 | 0 |

இவை துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

எமது விலாசம்:— ஸ்ரீ பாரதி புத்தகசாலை,
சூளை போஸ்ட், மதராஸ்.

# வாயாடி வம்பன்

ஓயாத சிரிப்பைத்தரும் ஓர் இனிய செந்தமிழ் நாவல்

இது

காஞ்சீபுரம் தி. அரங்கசாமி நாயுடு அவர்களால்

எழுதப்பட்டு

9-ம் பதிப்பு

கீழ்க்கட்டளை

எஸ். துரைசாமி முதலியார் அவர்களால்

தமது

சென்னை சூளை "ஸ்ரீ பாரதி" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1941

காபி ரைட்]

[விலை அணா 4

PRINTED AT THE
SRI BHARATHI PRESS,
CHOOLAI, MADRAS.

# முகவுரை

ஓயாத சிரிப்பைத்தரும் "வாயாடிவம்பன்" எனப் பெயர் பெற்ற இவ்வரிய நூல் அப்பெயருக்குரிய அங்கங்களைக் குறைவறத் தன்னிடத்தே யடக்கியுள்ளதென்று யான் சொல்லாமலே விளங்கும். இந்தப் பெயரே வாய்க்கப்பெற்ற சில புத்தங்களைக் கண்ணுற்ற யான் அப்பெயர்களினாலேயே அவைகளின்மேல் அவாவுற்று வாசிக்கத் தொடங்கி அவ்வித சிரிப்பைத் தரக்கூடிய விஷயங்கள் ஒன்றையும் யான் காணாமையினால், உண்மையாகவே சிரிப்பைத் தரும்வண்ணம் பல அரிய நீதிகளையும், கற்பின் மேன்மையையும், பிறர்மனை நயவாமை, காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், ஈதன்மறுத்தல் என்னும் பாதகங்களினால் வரும் கேடுகளையும் செவ்வனே விளக்கிப் பல நூற்களி னின்றும் செய்யுட்களை மேற்கோள்களாக எடுத்துக்காட்டி, இக்கதையைப் பலரும் வாசித்துணர்ந்து ஆனந்த மடையுமாறு இதை எழுதத்துணிந்தனன்.

இங்ஙனம்:

காஞ்சீபுரம் தி. அரங்கசாமி நாயுடு.

# வாயாடி வம்பன்

## அத்தியாயம் 1

### தனபாலனும், குண்டுணி குப்பம்மாளும்

"அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில்லாமல்
திடமுள மோகனமாடக் கழைக்கூத்தாடச்
செப்படிவித்தைகளாடத் தெரிந்தோமில்லை
தடகுசவேசையராகப் பிறந்தோமில்லை
சரியான மறையைவிட்டுத் தையலார்த
மிடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை
என்ன ஜன்மமெடுத்துலகி லிறக்கின்றோமே."

என்றபடி குண்டுணி குப்பம்மாள், அதிபாலியத்திலேயே தன் புருடனையிழந்து, அதுமுதற்கொண்டு இப்போது சுமார் 30-வருடங்களாக இச்சித்திர புரத்தில் நாரியரிடம் தூதுசென்று, தனவந்தர்களை மாயவலைக் குட்படுத்திப் பொருள் சம்பாதித்து ஜீவித்துவந்தாள். அப்பட்டினத்தில் ஜயசீலன் என்னும் தனிகருடைய புதல்வனை தனபாலன் என்பான், தன் தந்தை இறந்தபிறகு அவர் வைத்துப்போன திரவியத்தைப் பாதுகாத்து, வீண் ஆடம்பரமில்லாமல் யாவரும் மெச்சத்தக்கவனாய் இருந்தான். இவனுடைய தாய் என்ன சொல்லியும் இவன் விவாகம் செய்துகொள்ளச் சம்மதிக்காதவனாயும் இருந்தான். இவனுக்கு வயது முப்பது.

"போந்த வுதாரனுக்குப் பொன்துரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணம் சிறுதுரும்பு—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரியருந் துரும்பா மில்லத்
துறவிக்கு வேந்தன் துரும்பு."

என்றபடி இவன் விஸ்தாரமாக நூற்களைப் படித்ததினுல், ஸ்திரீகளுடைய கூட்டுறவு பலகேடுகளை உண்டாக்குமென, அவர்களை முற்றும் வெறுத்தவனுய் இருந்தான். இப்படியிருக்க ஒருநாள் இவன் அவ்வூரில் நடந்த ஓர் ஊர்கோலத்தின் கூடப்போகும்படி நேரிட்டது. ஒரு வீதியின் வழியாய்ச் செல்லும்போது ஜன நெருக்கத்தினுலும். ஸ்திரீகள் பலர் தன்மேல் உராய்ந்துச் செல்வதினுலும், தனக்கு வெறுப்புண்டாகி அங்கோர் வீட்டின் தெருத் திண்ணையில் உட்கார்ந்தான். அவ்வீட்டின் ஜன்னல் கதவு திறந்திருந்தது. உட்புரத்தில் ஒரு வாலிபப்பெண் நின்றிருக்கப் பார்த்தான். அவளும் இவ்வாலிபனைப் பெருங் காமத் தீப்பார்வையால் பார்த்தாள். உடனே அவன் தன் வைராக்கியத்தை விட்டவனுய்,

"பைந்தொடிய ராசைநோய் கம்பீர
மனிதரையும் பதுமந் தன்னை
முந்திரவி மதிர்போல மிளிர்விக்குங்
கனலிடியு முனைக் கூர்வாளும்
வெந்தவிருப் புப்பொறியு மெனக்கொடிய
மனவேட்கைமே லொத்ததொரு
சுந்தரர்ஞா னியர்தீரர் சூரரை யெல்லாம்
மிகைப்பிற் றுரும்பு செய்யும்."

என்றபடி இவனுடைய கல்மனமும் உருகி, அவளையே உற்றுப்பார்த்த வண்ணமாய் இருந்தான். அப்பெண் உடனே அந்த ஜன்னலை மூடிக்கொண்டாள். தனபாலன் அவளுடைய மோகத்திலகப்பட்டு ஒன்றும் தோன்ருதவ

னாய் அவ்விடம் விட்டெழுந்து தட்டுத்தடுமாறி வீடுவந்து சேர்ந்தான்.

"அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினு மஞ்சப் படும்."

என்பதுபோல், இவன் தேக ஸ்மரணையிழந்து சோபாவின் மீது சயனித்தவண்ணமிருந்தான். ஊண் உறக்கத்தையும் விடுத்தான். அவனுடைய தாயாரும், தன்பிள்ளைக்கு, அகஸ்மாத்தாய் நேரிட்ட தேக அசௌக்கியத்திற்காக அநேக வயித்தியர்களைக்கொண்டு சிகிச்சைசெய்ய ஆரம்பித்தாள். ஒன்றும் குணப்படவில்லை. அவனும் தன் வியாதி இன்னதென்பதும் தெரிவிக்க வெட்கப்பட்டு, யாரிடமும் சொல்லாமலிருந்தான். அவன் தாயாரும், மற்றப் பந்துக்களும் இவன் பிழைக்கமாட்டானென்றே நிச்சயித்திருந்தார்கள். இச்சங்கதி அவ்வூரிலுள்ள குண்டுணி குப்பம்மாளுக்குத் தெரியவந்தது. இதுதான் தனக்குப் பொருள் சம்பாதிக்கும் காலமெனச் சந்தோஷித்து, தனபாலனுடைய வீட்டிற்குச்சென்று அசௌக்கியமா யிருப்பவனைப் பார்த்தாள். அவன் தாயார், பந்துக்கள் முதலானவர்களைச் சற்று வெளியிலிருக்கும்படி ஆக்யாபித்துத் தனபாலனை நோக்கி, "அடா மகனே! உனது வியாதி இன்னதென்று யாருக்கும் தெரிவிக்காமலிருந்தாயே! எனக்கோ நீ தெரிவிக்கவேண்டியதில்லை, நானே மிகவும் அனுபோகமுள்ளவள். எப்படிப்பட்ட இரகசியங்களையும் பிறர் சொல்லாமலே அறிந்துகொள்ளும் சக்தி எனக்குண்டு. நீ என்னளவில் வெட்கப்படாமல் எந்த ஸ்திரீயைக்கண்டு மோகித்திருக்கின்றாயோ அன்னவள் யாரென எனக்குத் தெரிவிக்கவேண்டும். நான் அதற்குச் செய்யவேண்டியதைச்செய்கிறேன்" என்றனள்.

**தனபாலன்:**—அம்மா ! நான் சிலநாட்களுக்குமுன் இவ்வூரில் நடந்த ஒரு பெரும் ஊர்கோலத்துடன் வீதிகளின் வழியாகச் செல்லும்போது, ஜனநெருக்கத்தினுலும், ஸ்திரீகளை நான் முற்றும் வெறுத்திருந்தமையால் அவர்கள் என்மேல் உராய்ந்துசெல்வது எனக்குச் சங்கடமாயிருந்தபடியாலும், வடக்கு வீதியின் தென்னண்டை வாடையில் 5-வது வீட்டுத் திண்ணையின்பேரில் சற்று உட்கார்ந்தேன்; அவ்வீட்டின் ஜன்னல் திறந்திருந்தது. அங்கோர் வாலிபப் பெண் நின்று என்னைப் பார்த்தனள். நானும் அவளைப் பார்த்தேன். அவளோ,

"அன்னம் பழித்தநடை யாலம் பழித்த விழி
யமுதம் பழித்த மொழிகள்
பொன்னம் பெருத்தமுலை கன்னங் கருத்தகுழல்
சின்னஞ் சிறுத்த விடையும்
என்னெஞ் சுருக்குமிவள் தன்னெஞ்சு கற்றகலை
யென்னென் றுரைப்ப தினிநான்
சின்னஞ் சிறுக்கியவள் வில்லங்க மிட்டபடி
தெய்வங்களுக் கபயமே."

என்றபடி, அதிரூபசௌந்தரியவதியாயிருந்தனள். உடனே அவள் ஜன்னலை மூடிக்கொண்டமையால் நான் அவ்விடம் விட்டு வீடுவந்து, அவளால் நான் அடைந்திருக்கும் மோகத்தினுல் ஊண் உறக்கத்தையும் இழந்தேன். நான் கொண்டிருந்த வைராக்கியத்திற்குத் தற்காலம் நான் இருக்கும் ஸ்திதியைச்சொல்ல வெட்கப்பட்டு யாரிடமும் தெரிவிக்கவில்லை. நீயே என் வியாதி இன்னதெனத் தெரிந்து சொன்னபடியால் என் வெட்கம் விட்டு உன்னிடம் தெரிவித்தேன, வியாதியையுணர்ந்த நீ இதற்குப் பரிகாரமும் உணர்ந்திருப்பாயென்பது திண்ணம். இதற்காக எவ்வளவு பொருளானுலும் நான் தரச் சித்தமாய் இருக்கிறேன்.

கு. குப்பம்மாள்:—மகனே ! நீ பயப்படவேண்டாம். இது விஷயத்தில் நான் பிரயாசை யெடுத்துக்கொண்டு, நீ மோகித்தவள் இன்னுளெனத் தெரிந்து வருகிறேன். ஆனுலும்,

"அத்தியின் மலரும் வெள்ளை
யாக்கைகொள் காக்கை தானும்
பித்தர்தம் மனமும் நீரிற்
பிறந்த மீன் பாதந்தானும்
அத்தன்மால் பிரமதேவ
னுலள விடப்பட்டாலும்
சித்திர விழியார் நெஞ்சந்
தெரிந்தவ ரில்லை கண்டாய்.''

என்றபடி, அந்த ஸ்திரீயின் அந்தரங்கக் கருத்தையறியாது யாதொரு பிரயத்தினமும் செய்யமுடியாது. இரண்டொரு நாள் அவளிடம் பழகிய பின்பே அவளுடன் எந்தச் சங்கதியும் தெரிவிக்க நேரும். எப்படியாகிலும் என் போதனைக்கு உட்படாதவர்கள் யாருமே கிடையாது. ஆனுல் இக் காலத்து நவீன நாகரீகத்தின்படி நான் இந்த மாதிரியாய்ச் செல்வேனுகில் காரியம் சித்திப்பது கஷ்டம். ஒரு பட்டுப் புடவையும், கைகளில் காப்பும், கொலுசும், கழுத்தில் மின்னூலும், காதில் ரவைக்கம்மலும், நான் அணிந்து செல்வேனுகில் எனக்கு அங்கு அதிக மரியாதை நடப்பதுடன் என்பேச்சும் தேவ வாக்காயிருக்கும். அத்துடன் நான் போகும்போதெல்லாம் நான் தைரியமாய் எதையும் பேசுவதற்குச் சித்துப்பொருளைச் சாப்பிடவேண்டும். அதற்கும் கொஞ்சம் திரவியம் வேண்டும். சித்துப்பொருளென்றுல் நீ மயங்கவேண்டாம். அதைச் சொல்லுகிறேன் சற்றுக் கவனமாய்க் கேட்கவேண்டும்.

(இதை வாசிக்கும் நண்பர்களுக்கு ஓர் சந்தேகம் ஏற்படலாம். அதாவது இந்தப் புத்தகத்திற்கு "ஓயாத

சிரிப்பைத்தரும், வாயாடிவம்பன் கதை" யெனப்பெயரிட்டிருக்க, இவ்வளவு படித்தவரையில் சிரிப்பைத் தரக்கூடிய விஷயம் ஒன்றையும் காணுேமே என்பதாகும். இதற்கு விடை இனி வாசித்தபின் விளங்கும்.)

அப்பா! ஆதியில் கருமையானவனும் பலசாலியும், தவசிகளுக்குத் துன்பஞ் செய்கிறவனும், அகங்காரியுமான கருவேலன் என்றோர் இராட்சதனிருந்தான். ஒரு மகரிஷியின் சாபம் தன்னைக் கெடுக்க வருவதற்கஞ்சி உடனே கருநிறத்தையும், கூர்மையான முட்களையும் உடைய ஓர் விருட்சமாய் நின்றான். அதுமுதல் அவ் விருட்சத்திற்கு அவனுடைய நாமமே விளங்கிவருகின்றது. இப்படி மேன்மைபொருந்திய மரத்தின் பட்டையைச் சீவி எடுத்து, அதன் ரசத்தைப்பிழிந்து, அதனுடன் எவ்வித மேகவிருத்தியையும் கண்டிக்கும் மேலான அவிழ்தமாகிய கந்தகமும், இன்னும் சில காட்டுச் சரக்குகளும், கடைச் சரக்குகளும் சேர்த்து பூமிதேவியினிடம் கொடுக்க, அவள் கைகளினால் அக்கினி பகவானிடம் ஒப்புவிக்க, அவர் அதைச் சுத்தி செய்த பின்னர் வாயுதேவனிடத்தில் கொடுக்க, அவர் அதைக் குளிரச்செய்து, எல்லாரும் அருந்தி ஆனந்திக்க ஏற்பட்ட வஸ்துவாகிய அதுதான் சித்தென்பது. அது சாதாரணமாய் எந்தப் பெயரால் சாமானிய ஜனங்களால் வழங்கப்படுவதென்றால் சொல்லுகிறேன் கேட்பாயாக. கீழேழு மேலேழு உலகத்தில் சஞ்சரிப்பவர்கள் சாப்பிடுவதும், அருந்தவர்களெல்லாம் அதைப் பார்த்தவுடன் ஆசைப்படுவதும், தேவர்ளெல்லாம் கொண்டாடுவதும், நெடுநாள் அறியாதவர்களைச் சிநேகம் செய்துவைப்பதும், சரீரத்தின் உள்ளே புகுந்த மாத்திரத்தில் பூர்வீக விருத்தாந்தங்களை உணர்விப்பதும், தன் பேச்சுப்போல் வருகிறவர்களைத் தட்டிக்கொடுப்

பதும், புலியைக்கண்டாலும் அஞ்சாமல் எதிர்க்கக்கூடிய மனோதைரியத்தைத் தரக்கூடியதும், வியாதிகளையெல்லாம் வீராவேசங் கொண்டோட்டுவதும், மனோநிலையை மகா மேரு பர்வதத்தைப்போல் நிலைக்கச்செய்வதும், யோகிகட்கு யோக்கியமானதும், ஞானிகட்கு ஐயம்படச்செய்வதும், ஆகிய இவ்வரிய பெரிய விசேஷ மகத்துவங்களையுடையதுமாகிய அதன் நாமதேயம் இரண்டு பதங்களினால் சேர்க்கப்பட்டு, கருவேலன் பட்டையின் சாராதலினாலே முதல் பதம் சாரம் என்றும், மேன்மையான சரக்குகளின் சேர்க்கையினாலாய ரசாயனம் இரும்பையொத்த வலுவைத் தரக்கூடிய துணையினால் இரண்டாவது பதத்திற்கு அயம் என்றும், ஆகிய இவ்விரண்டு பதங்களாகிய சாரம், அயம் சந்திபூர்வமாக ஒற்றித்தகாலத்து, அதன் நாமம் சகலரும் மெச்சி சபாஷ் என்னும் சாராயம் என்பதேயாம்.

தனபாலன்:—அம்மா! நீ தெரிவித்த யாவற்றிற்கும் இதோ நாலாயிர ரூபாய்த் தருகிறேன் நீ இதை எடுத்துக் கொண்டுபோய் உன் இஷ்டப்படிச் செய்யலாம். எப்படியாகிலும் நான் மோகித்த ஸ்திரீயின் சிநேகத்தை நான் அடையும்படிச் செய்வது உனது கடமை.

---

## அத்தியாயம் 2

### வாயாடிவம்பனும், பஜாரி பங்கஜமும்

வா. வம்பன்—அடி! பங்கஜம்! இன்றையதினம் நான் வழக்கப்படி காலையில் ஷாப்பிற்குச்சென்று என் வேலையைக் கவனித்துக்கொண் டிருக்கையில் நம்மிடம் எப்போதும் வராதவரும், நமக்குக்கிட்டிய உறவினருமாகிய ஒரு பெரியவர் நம்முடைய வீட்டில் சாப்பிடுவதற்காகத் தெரிவித்து ஷாப்பில் உட்கார்ந்திருக்கிறார். அவருக்காக நீ சீக்கிரத்தில் சமைத்துவைக்கவேண்டும்.

(நவீன நாகரீகத்தின்படி வாயாடிவம்பன் கடைவீதியில் (SHAVING SALOON) "மயிர் கிராப் செய்யும் இடம்" என்று ஒருபோர்ட் எழுதப்பெற்ற ஒரு ஷாப்பில் நார்க்காலி ஒன்றும், நிலைக்கண்ணாடி ஒன்றும், இன்னும் மயிர் வெட்டிக்கொண்டு, முக க்ஷவரம் செய்து கொள்பவர்களுக்கு வாசனை எண்ணெய் முதலியவைகளையும் வைத்துக்கொண்டு நாவிதத்தொழிலைச் செய்துகொண்டு வருகிறான்.)

பஜாரி பங்கஜம்:—அப்படியா, சரி, சரி, உன் பழைய தொழிலுக்கு ஆரம்பித்தாயா? நல்ல வேடிக்கைதான். "தன்னைப்பெற்ற ஆத்தாள் கிண்ணிப்பிச்சை எடுக்கிறாளாம், தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்கிறானாம்" என்றதுபோல் வீட்டின் இருப்பு அறியாத ஆண்பிள்ளையை வைத்துக்கொண்டு என்னதான் செய்வேன்? அஞ்சும் மூன்றும் அடுக்காயிருந்தால் தானே, அறியாப் பெண்ணும் கறிசமைத்திடுவாள்? அன்னம்படைக்க அரிசி எது? விறகு எது? வெறுங்கையைக்கொண்டு முழம்போடுவது எவ்வாறு?

வா. வம்பன்:—இப்போது இரண்டு பேருக்குக் கிராப் செய்தேன். ஆகையால் என்னிடம் 8-அணா இருக்கின்றது. அதைக்கொண்டு அரிசி வாங்கலாம்.

ப. பங்கஜம்:—நன்றாய்ச் சொன்னீர்! அரிசி ஆழாக்கானாலும் அடுப்பங்கட்டி மூன்று வேண்டாமா? வீட்டில் சட்டியா? பானையா? எதைக்கொண்டு சமைக்கிறது?

வா. வம்பன்:—இதோ இன்னும் நாலணா என்னிடமிருக்கிறது. உனக்குவேண்டியதை வாங்கிக்கொள்.

ப. பங்கஜம்:—நல்லஇழவுதான்! உனக்கென்னவேலை? நீ நன்றாய்த்திரிகிறாய் எவனோ ஒருவன் வயிற்றுச் சோற்றுக்கு வந்தால் அவன் உனக்கென்ன உறவு. "ஆச்சானுக்குப் பீச்சான் மதனிக்கு உடன் பிறந்தான், நெல்லுக்குத்

துக் காரிக்கு நேரே பிறந்தவன்'' என்பதுபோல வழியில் போகிறவன் வருகிறவன் எல்லாம் உனக்குப் பந்துவென்று சாப்பாட்டுக்குச் சொல்லி விடுகிறாய், உனக்கு அழுவதல்லாமல் ஊருக்கும் அழவா? என்னாலே சற்றும் ஆகாது, எனக்குத் தலைநோகின்றது.

வா. வம்பன்—அடி உனக்கென்ன கேடு? நன்றாய் செக்குலக்கையைப் போலிருக்கின்றாயே. மூன்றுவேளை எல்லாரும் சாப்பிடுவதென்றால் நீ ஆறுவேளை சாப்பிடுகிறாய்! நீ. என்ன செய்வாய் பாவம்? உன்மேல் தப்பிதமில்லை. "நீரும், சோறும் தின்று நிழலில் படுத்தால் மலடிக்கும் மசக்கை வருமாம்'' என்பதுபோல நீ இருக்கிறாய்.

ப. பங்கஜம்—ஆம், ஆம், எருதுநோய் காக்கைக்கு என்ன தெரியும்? உன் சதையில் என்ன வாட்டம். நீயோ ஒதியமரம்போல் பெருத்து, ஊசியத்தனைத்தொண்டையையும், தாழிவயிறையும் வைத்துக் கொண்டிருக்கிறாய். வேளைக்கு முறம் சோறும், படிகுழம்பும் உனக்குப் பச்சடியாச்சே! என்று சொல்லிப் பாயைவிரித்துப் போட்டுப் படுத்துக்கொண்டாள். உடனே வாயாடிவம்பன் கோபத்தினால் தன் மனைவியைக்கையினால் ஒரு தட்டுத் தட்டினான். அவள் எழுந்து "அடேசண்டாளா! என்னைக் கொல்லவா ஏற்பட்டாய்? உன்னாலானமட்டும் அடி, இதோ உன் தலைக்குத் தீம்பு கொண்டுவருகிறேன் பார்'' என்று பெருங்கூச்சலுடன் தெருவில் வந்து கத்த ஆரம்பித்தாள். பார்த்தான் வாயாடிவம்பன் தன் மனைவியின் செயலை,

"ஐயருக் கமுதுபடை யென்று வந்தாய் நீயு
மாண்பிள்ளை யென்றெண்ணியோ
அரிசி எங்கே பானை சட்டி யெங்கே யென்பவள்
அவள் சொன்ன வகைகளெல்லாம்
பையவே கொண்டுவந் தாலுஞ் சமைக்கப்
படாது தலை நோகுதென்று

பாயிற் கிடப்பள்சின மாயொன்று பேசினுற்
பாருனக் கேற்றபுத்தி
செய்யவல் லேனென்பள் சற்றடித்தால் நஞ்சு
தின்கிறேன் கூகூவெனத்
தெருவீடுதோறு முறையிடு பெண்டிருண்டெனிற்
நீயாமன் வேறுமுண்டோ
வையகம் புகழ்சோலை-மலையலங் காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே.”

என்றதை நினைத்துத் தன் ஷாப்பிற்குச் சென்முன்.

---

## அத்தியாயம் 3

### சாந்தாவின் சம்மதம்

கு. குப்பம்மாள்.—தனபாலன் தெரிவித்த அடையாளத்தின்படி பார்க்குமளவில் இஃதோர் பெரிய மனிதனுடைய வீடாயிருக்கிறது. இவ்வீட்டுக்குடையவர் இந்தப் பட்டினத்தில் பென்ச் மாஜிஸ்ட்ரேட்டு, (Bench Magistrate) என்னும் அதிகாரத்தையுடையவர். இவர் நாமதேயம் சுப்பையர் எனச் சொல்லுகிருர்கள். இவருக்கு விவாகமாகாத சாந்தா என்னும் பெண் ஒருத்தியும், வேலைக்காரன் ஒருவனுமே இவ்வீட்டில் இருப்பவர்களாகத் தெரிகிறது. ஆனல் நான் வந்த இந்தச் சமையத்தில் அவர் வெளியில் சென்றிருப்பதாகத் தெரிகிறது; நல்லது நான் உள்ளேசென்று என்னுடைய முழுசாமர்த்தியத்தினுலும் அப்பெண்ணின் நிலைமை இன்னதென உணர்வேன். (வீட்டின் உள்ளே பிரவேசித்தல்)

சாந்தா.—அம்மா! தாங்கள் யார்? எங்குவந்தீர்கள்? தெரிவிக்க வேண்டுகிறேன்.

கு. குப்பம்மாள்.—குழந்தாய்! நானிருப்பதுவிஜயபுரி. என் புருடன் 10-வருடங்களுக்குமுன் இறந்துபோனார். எனக்கு 15-வயதுள்ள குமாரன் இருந்தான். அவன் பெயர் கஜபதி. அவனை ஒரு உபாத்தியாயரிடம் வித்தை கற்றுக்கொள்ள விட்டிருந்தேன். ஒருநாள் அவன் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், மேலே துணியில் கட்டித் தொங்கவிட்டிருக்கும் மூட்டையை எனக்குக் காட்டி "இதுவென்ன மூட்டை" யென்றான். நான் சொன்ன தாவது:—அப்பா! மகனே! அது உன் தந்தையின் அஸ்திகள். அவைகளைக் கங்கையில் விடவேண்டியது. ஏனென்றால் யாருடைய எலும்புகள் கங்கையில் விடப்படு கிறதோ அந்த ஆத்மாவுக்கு உடனே மோட்சம் லபிக்கு மென்று சாஸ்திரமிருக்கின்றமையால், இந்த அஸ்திகளையும் கங்கையில் கொண்டுபோய் விடுவதற்கு அவவளவு தூரம் போகக்கூடியவர்கள் யாருமில்லை. எப்போதாகிலும் யாரா வது போகநேரிடின் அவர்கள் மூலமாய்க் கொடுத்தனுப்ப சேமித்து வைத்திருக்கிறேன் என்றேன். பிறகு நான் அந்தமூட்டையைக் கவனிக்கவில்லை. சிலநாட்களுக்குப்பின் நான் கடைவீதி வழியாகப் போய்க்கொண்டிருக்கையில் சிலமனிதர்கள் கூட்டமாயும், அக்கூட்டத்தில் ஓர்பெரியவர் நின்றுகொண்டு, "ஐயோ! இது என்ன கொடுமை! இவ் வித அக்கிரமம் எவ்விடத்திலாயினும் நடந்ததுண்டா? ஆசாரியன் என்கிற குருத்துவம் கொஞ்சமாகிலுமில்லாமல் இந்தச் சிறுவன் இவ்வாறு செய்தனனே; இதை யாரும் விசாரிப்பவர்கள் கிடையாதா? என்வாயிலிருந்த பற்களு மூதிர்ந்துபோய் விட்டதே! ஐயோ! நான் பிராமண னுயிற்றே, மாமிசத்தையாகிலும் எலும்புகளையாகிலும் ஸ்பரிசிக்கலாகுமா? அதிலும் எலும்புகள் இச்சிறுவனால் வாயில் கொட்டப்பட்டதே! இவ்வூரில் நீதியில்லையா?

என்று கூக்குரலிட்டான். அங்கிருந்தவர்களில் சிலர் அவ் வந்தணனை நோக்கி கூக்குரலிடுவதற்குக் காரணமென்ன வென்று கேட்க, அவ்வேதியர் துக்கத்துடன் சொன்ன தாவது:—ஐயோ! நானொரு பிராமணன். நான் சிலமாண வர்களுக்கு வித்தைக் கற்றுக்கொடுத்து வருகிறேன். அப் படியிருக்க இத்தனை மாணவர்களில் இதோநிற்கிற சிறுவன், நான் பாடம் கற்றுக்கொடுத்துக்கொண்டிருக்கையில் என் வாயையே வெகுகவனமாய்ப்பார்த்துக் கொண்டிருந்தான். நான் பாடம் சொல்வதிலேயே கவனமாயிருந்தான். எனக் குக் கொட்டாவி வந்தமையால் வாயைத்திறந்தேன். அந்த சமயத்தில் இவன் மறைத்து வைத்திருந்த சில எலும்புகளை என் வாயில் திடீலென்று கொட்டினான். அந்த எலும்பு கள் பட்ட அதிர்ச்சியினால் என் பற்களும் உதிர்ந்து போய் விட்டன" என்றான். அங்குக்கூடியிருந்தவர்கள் இக்கும்ப லில் நின்றிருந்த சிறுவனை நோக்கி, "அடே பயலே! கொஞ்சமாகிலும் உபாத்தியாயர் என்கிற மரியாதைச் சற்றும் வைக்காமல் கையினாலும் தொடக்கூடாத மனித எலும்பை அவருடைய வாயில் கொட்டிப் பற்கள் விழும் படிச் செய்யலாமா? இவ்வித அக்கிரமம் செய்ய யார் உனக்குக் கற்றுக்கொடுத்தது?" என்றனர்கள். அச்சிறு வன் அவர்களை நோக்கி, "ஐயன்மீர்! எனக்கிவர் பாடம் சொல்லிக்கொண்டிருக்கையில் அவர் வாயிலிருந்து எச்சல் அடிக்கடி என்மேல் பட்டுக்கொண்டிருந்தது. அது எனக் குச் சரிப்படாமல் அவரிடம் சொன்னேன் அதற்கு அவர் "அடே பயலே! என்னைப்போன்ற பெரியோர்களின் எச்சல் உன்மேற்பட நீ பூர்வம் புண்ணியம் செய்திருக்க வேண்டும். என் எச்சல் கங்கைக்குச்சமானம். ஆகையால் என் எச்சில் யார்மீது படுகிறதோ அவர்கள் கங்கையில் ஸ்நானம் செய்ததற் கொப்பாகும். அதோடு அவர்க

ளுடைய ஜன்மமும் சாபல்யமாவதுடன் மோட்சப்பதவி யையும் அடைவார்கள்'' என்றனர். ஒருநாள் என்வீட்டில் ஏதோ ஒரு மூட்டை தொங்கவிடப்பட் டிருந்ததை நான் பார்த்து, என் தாயாரை அது யாதெனக்கேட்டேன். அது என் தந்தையின் அஸ்திகளென்றும், அவர் மோட்சப் பதவியையடையும் பொருட்டு, அஸ்திகளைக் கங்கையில் விடவேண்டுமென்றும், ஆனல் கங்கை தொலைதூரத்திலிருக் கிறபடியால் யாராவது எக்காலத்திலாகிலும் அங்குப்போக நேரிட்டால் அவர்கள் வசம் அனுப்புவதற்கு வைத்திருக் கிறதெனவும் அறிந்தேன். பிறகு யான் யோசித்த தாவது:—கங்கைக்கு ஏன் போகவேண்டும்? அதுவும் எந்தக்காலத்தில் முடியுமோ. அதுவரையில் என் தந்தை மோட்சமடைய இடமில்லையே. கங்கைக்குச் சமானமான கங்கை நம்முடைய உபாத்தியாயரிடம் இருக்கின்றதே என்று என் தாய்க்குத் தெரியாமல் அந்த எலும்பு மூட் டையை எடுத்துக்கொண்டு வந்து என்பக்கத்தில் வைத் திருந்து, கங்கை இருப்பிடமாகிய உபாத்தியாயருடைய வாய் நன்றாக எப்போது திறக்கப்படுமோ என்று சமயம் பார்த்துக்கொண்டு அதே கவனமா யிருந்தேன். இப் போது தான் சற்று நேரத்திற்குமுன் ஆவென்று வாயைத் திறந்தார். உடனே நான் மறைத்துவைத்திருந்த எலும்பு களை எல்லாம் அவர் வாயில் கொட்டிவிட்டேன். என்பிதா வும் மோட்சமடைந்திருப்பார். இது குருவாக்கின்படிச் செய்தேனேயொழிய உபாத்தியாயர் இப்போது சொல்கிற வண்ணம் நான் யாதொரு அக்கிரமும் செய்யவில்லை என் றான். இதற்குள் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் அக் கூட்டத்தினிடம் வந்து அச்சிறுவனை டாணவுக்கு அழைத் துக்கொண்டு போவதைப் பார்த்தேன். அச்சிறுவன் யாரென நான் சமீபித்துப் பார்க்கையில் என் குமார

னென்று தெரியவந்தது. நான் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அவனுடன் நீதிஸ்தலத்திற்குச் சென்றேன். நீதித்தலைவன் சில சாட்சிகளை விசாரித்த பிறகு சிறுவன் செய்தது அக்கிரமமென்று 3-மாதம் கடுந்தண்டனை விதித்தான். என் குமாரன் இப்போது சிறைச் சாலையிலிருக்கிறான். அதுமுதல் என்மனம் நொந்து புத்திர சோகத்தினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கையில் இவ்வூரில் ஒரு பெரிய தனவந்தனுடைய குமாரனான தன பாலன் என்னும் வாலிபன் எனக்குத் தேறுதல் சொல்லி என்னைக் காப்பாற்றிவந்தான். அவனாலேயே நான் குமாரனை மறந்திருக்கிறேன். ஆனால் இவ்விதம் என்னைக் காப்பாற்றிவரும் அச்சுந்தரபுருடனாகிய தனபாலனும் இன்னும் இரண்டொருதினத்தில் மரணமடைவான்போலத்தோற்றுகிறது. நான் என்ன செய்யப்போகிறேன், பாழும் கடவுள் என்னை இப்படியும் சோதிக்கலாமா? என்று மூர்ச்சை யடைந்தவளைப்போலப் பாசாங்கு செய்தனள்.

சாந்தா:—(கிழவியை எடுத்து உட்காரவைத்து) அம்மா! நீ துயரப்படாதே. உன்னை யாதரித்துவரும் தனபாலன் என்பவன் வாலிபனெனவும், திரவியவந்தனெனவும் சொன்னாய். அப்படியிருக்க அவ்வளவு அகஸ்மாத்தாக இரண்டொரு நாளில் மரணமடையக் காரணம் யாது?

கு. குப்பம்மாள்:—மகளே! நான் என்னென்றுசொல்வேன்.

“திருக்கிளர் முகமும் வேர்வும் சிறந்த செம்பவள வாயும்
மருக்கிளர் மாலைமார்பும் மகரகுண்டலமும் காதும்
சுருக்கிய மருங்குங் கண்டாற் றுடியிடை மடவராவி
இருக்கினு மிருக்கு மில்லா திறக்கினு மிறக்குமன்றே.”

என்றபடி, அவ்விளைஞன் அதிகசுந்தரமுள்ளவன். அவனுக் கிணையாக மன்மதனைச் சொல்லலா மென்றாலோ மன்மத

னுக்குச் சரீரமில்லை சுந்தனை நிகர்த்தச் சுந்தரவடிவினன். அவன் அநேக சாஸ்திரங்களைப் படித்து ஸ்திரீகளுடைய சாங்கித்தியம் கூடாதென வெறுத்திருக்கையில் ஒரு நாள் பாபம்! நான் என்ன சொல்லுவேன்........................

சாந்தா:—ஏனம்மா! அவ்வளவோடு நிறுத்திவிட்டாய். அப்படிப்பட்ட சுந்தரபுருடனுக்கு என்ன ஆபத்து சம்பவித்தது?

கு. குப்பம்மாள்:—ஆபத்தென்ருலும் ஆபத்தா! பிராணனே போகவேண்டியதாக யிருக்கிறதே அதற்கு ஏதாகிலும் நீ பரிகாரம் செய்து அவனுடைய பிராணனை இரட்சிப்பதாயின் மற்றச் சங்கதியும் வெளியிடுகிறேன்.

சாந்தா:—அம்மா! ஒரு மனிதனுக்குப் பிராணன் போகும்படியான ஆபத்துக்களிருந்தால் யார்தான் அதற்குத்தகுந்த சிகிச்சை செய்யமாட்டார்கள். என்னுலான உதவியை நான் செய்கிறேன். அப்புருடனுடைய ஆபத்து இன்னதென தெரிவிக்க வேண்டுகிறேன்.

கு. குப்பம்மாள்:—ஒருநாள் அவன் இவ்வூரில் நடந்த ஓர் ஊர்க்கோலத்துடன் நீ இருக்கும் இந்த வீதி வழியாக வருகையில், மாதர்கள் பலர் ஜனநெருக்கத்தால் தன்மேற் படுவது சகிக்காமல் உன்னுடைய வீட்டின் திண்ணையின் மேல் சற்று உட்கார்ந்தானும். அப்போது வீதியின் சன்னல் திறந்திருக்க நீயும் அங்கு நின்றிருப்பதை அவன் உற்றுநோக்கி உன் சௌந்தரியத்தைக்கண்டு அவனுடைய இரண்டு கண்களினுல் உன்னை இருகத் தழுவிக்கொண்டானும். நீயும் அவனைப்பார்த்து, பிறகு சன்னலை மூடிக்கொண்டாயாம். அன்றுமுதல் அவன் ஊண் உறக்கமின்றி கிடக்கின்ருன். அதிகமாக மெலிந்து பிராணன் போகுந் தருவாயிலிருக்கிருன். உன்னுல் ஒருபுருடன் உயிர் இழப்பதென்ருல் அது உனக்கு மிகவும் பாவத்தை யுண்டுபண்ணு

மல்லவா? ஆகையால் நீ இப்போது எனக்கு வாக்களித்த படி அவனுடைய பிராணனைக் காப்பாற்ற வேண்டியது. அதாவது நீ அவனுடைய காதலைத் தணிக்கவேண்டியது.

சாந்தா:—என்ன, தர்ம சங்கடமாகப்போய்விட்டதே நானோ விவாகமாகாதவள், அதிலும் என் தந்தையினுடைய கடுங்காவலோ அதிக நிர்ப்பந்தம். நீ சொல்லும் புருடனோ உயிர் துறக்குந் தருவாயிலிருக்கிறான் என்கிறாய். அவனுடைய காதலை யான் தணிக்காவிடிலோ அவனுடைய மரணத்திற்கு யான் காரணமாகின்றேன். என் தந்தை வாரத்திற்கொருநாள் அதாவது புதன்கிழமை தோறும் தன் உத்தியோக விஷயமாகப் பகல் 11-மணிக்கு வீட்டை விட்டுப் போய் மறுபடியும் மாலை 3-மணிக்குத் திரும்பி வந்து விடுவார். ஆகையால் இன்று புதன்கிழமை யாதலால் அவர் போயிருக்கிறார். வருகிற புதன்கிழமைப் பகல் 11-மணிக்குமேல் அப்புருடனை இங்குவரச் சொல்.

கு. குப்பம்மாள்:—நல்லது, அம்மா! நான் போய் வருகிறேன்.

---

## அத்தியாயம் 4.

### தனபாலனும், குண்மேணி குப்பம்மாளும்

தனபாலன்:—அம்மா! உன் முகக்குறிப்பை நோக்கும்போதே காரியம் ஜெயமாகவில்லை யெனத் தோன்றுகிறது. நீ போனசங்கதி என்னவாச்சுது? நீ உடனே தெரிவிக்காவிடில் என் ஆவி நிற்காது போலிருக்கிறது.

கு. குப்பம்மாள்:—குழந்தாய்! போன சங்கதி தெரிவிக்கிறேன். நீ தெரிவித்த மங்கையைப் பார்த்தேன். இன்னும் எவளாயிருப்பினும் ஒருநொடியில் என் கைவசப் படுத்திக்கொள்ளுவேன். அவளோ இப்பட்டினத்தின் பென்ச் மாஜிஸ்ட்ரேட்டினுடைய குமாரத்தி. இன்னும்

விவாகமாகாதவள். அவளுடைய தந்தையின் துஷ்ட நிர்ப் பந்தத்தில் அவளை என்போன்றவர்களே காண்பதரிது. தெய்வாதீனமாய் அவர் உத்தியோக விஷயமாய்ப் போயி ருக்கும் சமயம்பார்த்து நான் வீட்டில் பிரவேசித்தேன். என்னுடைய முழுசாமர்த்தியத்தையும் உபயோகப்படுத்தி என்னுடன் சில சங்கதிகள் தனியாகப்பேச இடங்கொடுக் கும்படிச் சொன்னதில் அவள் என்னைக் கடுகடுத்துப் பார்த்து, இவ்வித சங்கதிகளை இனிமேல் என் காதில் போடாதே யென்றனள். நான் சில இதமான வார்த்தை களைச் சொல்லிப் பிறகு விடைபெற்றுக்கொண்டுவந்தேன்.

தனபாலன்:—ஏது! எனது வியாதி நீங்க இடமில்லை போல் தோற்றுகிறது. இவ்வளவு அசாத்தியமான காரி யம் எவ்வாறு கைகூடும்? இது விஷயமாக என்னுடைய ஆஸ்தி முழுவதையும் நான் செலவிடச் சித்தமாயிருக்கி றேன், ஏனெனில் என் பிராணன் போன பிறகு இவ்வாஸ்தி யினால் எனக்காக வேண்டியதென்ன விருக்கிறது? அம்மா! அப்பெண்மணியைப் பார்த்த நாள் முதல்.

"நானந்தப் பெண்ணைக்கண்டு நயமுடனவள்மேலாசை
மானவ ரென்றெணாத மட்டுமே வைத்துவிட்டேன்
ஊனமாய் உலவுகின்ற உடல்பொருள் ஆவிமூன்றும்
ஆனதோர் அவள்பொருட்டே அர்ப்பணம் செய்துவாரேன்."

கு. குப்பம்மாள்:—மகனே! நீ அதைரியப்படாதே. நான் எப்படியாகிலும் காரியத்தை முடிப்பேன். அந்தப் பெண்ணுக்குப் பொருளின்மேல் அதிக ஆசை யிருப்ப தாகத் தெரியவருகிறது. சாதாரணமாய், பொருளுக் காகவே பலர் பலவித காரியங்களில் பிரவேசித்து அக்காரி யங்கள் நன்மை யென்பதையும், தீமை யென்பதையும் கவனிக்காது கஷ்டப்படுகின்றனர். ஆதலால் பொருளே எதற்கும் பிரதான கருவியா யிருக்கிறது.

"விளக்கொளியும் வேசையர் நட்பு மிரண்டும்
துளக்கற நாடின் வேறல்ல—விளக்கொளியும்
நெயற்றக் கண்ணே யறுமே யவரன்பும்
கையற்றக் கண்ணே யறும்."

என்றபடி, வேசையர்களுக்கே பொருளினிடம் அதிகப் பிரீதி யென்று நினைக்காதே. இவளுக்கும் ஆசைகாட்டினல் தான் காரியம் ஜெயமாகும்.

தனபாலன்:—அம்மா! எவ்வளவு பொருள் இதற்காக வேண்டி யிருந்தபோதிலும் யான் கொடுக்கச் சித்தமா யிருக்கிறேன். ஆனல் காலதாமதம் நேரிடும் பட்சத்தில் என்னல் அதுபரியந்தம் நில்லாதுபோல் தோன்றுகிறது. (உடனே தன் ஞாபகத்தை தனக்கு மோகம் மூட்டிய நங்கையின்மேல் செலுத்தினன்) ஆ! கண்மணீ! உன் சுந்தரமான பார்வை நான் மரித்தாலொழிய என் மனத்தினின்றும் நீங்காது. உனது மாசற்ற வடிவத்தைக் கண்டதினல்தான் சந்திரன் நாணமுற்றுத் தன் கிரணங்களையெல்லாம் மறைத்து நாளுக்குநாள் தேய்ந்து குறைந்து நலிந்திடுகின்ருன். ஆ! மந்தகமனா!

"அறந்திகழ் தவமினி யகிலமு மிதனு
லழியுமென் றயன்படைத் திலனே
சிறந்தவேல் விழியைமுன் படைத்தயர்ந்து
செங்கரஞ் சோர்ந்ததோ திகைத்து
மறந்ததோ கரந்து வைத்ததோ களப
வனமுலைப் பொறை சுமந்துருகி
இரந்ததோ உளதோ இல்லையோ இனிமே
லெய்துமோ வன்னவ ளிடைதான்."

(மூர்ச்சித்தல்)

கு. குப்பம்மாள்:—அந்தமங்கையின் சிநேகம் இவனுக்குக் கிடைப்பதற்குள் நாம் பணம் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். பிறகு நமக்குக் கிடைப்பதரிது. காற்றுள்ள

போதே தூற்றிக்கொள்ள வேண்டியது. (தனபாலனுடைய மூர்ச்சையைத் தெளிவித்து) மகனே ! நீ தைரியத்தை விடாதே. நான் சாமானியமானவளன்று என்பதை முன்னிட்டே தெரிவித்திருக்கிறேன். எவ்விதத்திலாகிலும் நாளைய தினம் உனக்கு நல்ல வாக்குக் கொண்டுவருகின்றேன்.

தனபாலன்:—அம்மா! இதோ ஆயிர ரூபாய்களடங்கிய பையொன்று வைத்தேன். இதை நீ எடுத்துச்சென்று அம்மாதிடம் தருவாயாக.

கு. குப்பம்மாள்:—(பணப்பையைத் தன் வீட்டில் பத்திரப்படுத்தி விட்டு, தனபாலனிடம் மறுநாள் வந்து) அப்பா ! தனபாலா ! உனக்கு மங்களமுண்டாகுக ! நான் சென்ற சங்கதி ஜயமாய் முடிந்தது. நாளை புதன்கிழமை பகல் 11-மணிக்குமேல் 3 மணிக்குள்ளாக நீ அந்நங்கையிடம்சென்று உன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். அக்குறித்த காலத்தில்தான் அவளுடைய தந்தை உத்தியோக விஷயமாகச் சென்றிருப்பார். ஆகையால் அக்காலம் தவறினுல் சமயம் கிடைப்பது அரிது. நாளைக்குத் தவறுமல் செல்லுவாயாக, உனக்காக அம்மங்கை காத்திருப்பாள். ஆனுல் நீ நெடுநாளாக அசௌக்கியமாயிருந்தபடியால் நாளைக் காலையில் சுத்தமாக க்ஷவரம் செய்துகொண்டு ஸ்நாநபாநாதிகளை முடித்துக்கொண்டு போகலாம். (நிட்கிரமித்தல்.)

---

## அத்தியாயம் 5

### வாயாடிவம்பனுடைய அதனப்பிரசங்கம்

வா. வம்பன்:—என்னிடம் விருந்தாக வந்த நண்பருக்குத் தகுந்தபடி விசாரித்து விருந்து செய்யவோ என் மனைவி அவளுடைய இயற்கையான நீலித்தொழிலுக்கு

வந்து மறுத்தனள். அதிகமாகப் பொருள் கிடைத்தாலும் வேறு எங்கேயாகிலும் அவருக்குச் சாப்பாடு செய்விக்க லாம் (பெரியவரை நோக்கி) ஐயா பெரியவரே ! சற்று ஆயாசம் தீர படுத்துக்கொண்டிருங்கள். அதோ யாரோ ஒரு வாலிபன் நம்முடைய ஷாப்பைநாடி வருகிறான். அவ னைப் பார்க்கில் ஒரு செல்வவந்தனுடைய குமாரனாகத் தோன்றுகிறது.

தனபாலன்:—(ஷாப்பில் நுழைந்து) ஐயா ! எனக்கு மயிர் கிராப் செய்து க்ஷவரம் செய்யவேண்டும்.

வா. வம்பன்:—ஐயா ! அப்படியே செய்கிறேன். இதோ இந்த நாற்காலியில் உட்காருங்கள் தங்களை இதற்கு முன் எங்கேயோ பார்த்திருப்பதாக நினைவு வருகின்றது. தாங்கள் எங்கிருப்பது........? ஒகோ! ஜயசீலருடையகுமார ரல்லவா நீர் ? சில நாளாக அசௌக்கியமா யிருந்ததாகக் கேள்விப்பட்டேன், உடம்பு இப்போது உங்களுக்குச் சௌக்கியந்தானா ? உம்முடைய தேகம் சவுக்கியப்பட்ட தற்காக நான் கடவுளுக்கு வந்தனம் செய்கிறேன்.

தனபாலன்:—அப்பா ! நீ ஆலசியம்செய்து வீண்பேச் சுப் பேசுவதை விட்டுவிடு. நான் அவசரமாக இன்று மத்தி யான வேளைக்கு ஒரிடத்துக்குப் போகவேண்டும். சீக்கிரம் க்ஷவரத்தை ஆரம்பித்து முடித்துவிடு.

உடனே வாயாடி வம்பன் தன்னுடைய பெட்டியைத் திறந்து கத்தியையெடுத்துச் சற்றுநேரம் கல்லில் தீட்டுதலி லும், பிறகு தோலில் தீட்டுவதிலும் கொஞ்சம் காலத்தைப் போக்கித் தனபாலனை நோக்கி, "ஐயா, இன்று புதகுஜ யோக மாகையால் உமது க்ஷவரத்திற்கு நன்றுதான். ஆனால் நீர் போகும் காரியம் ஜயமடையமாட்டாது. அத் துடன் உமக்கு இன்று பெரிய ஆபத்து நேரிடும். அப்படி நேரிடும் பட்சத்தில் நான் துக்கப்படவேண்டி வரும்."

தனபாலன்:—உன்னுடையஜோசியமும், ஆலோசனையும், எனக்குத் தேவையில்லை, உன்னை ஜோசியம் கேட்க நான் இங்கு வரவில்லை, க்ஷவரம் செய்துகொள்ளவந்தேன். நீ சீக்கிரமாய் க்ஷவரம் செய்தால் செய், இல்லையாகில் நான் வேறு இடம் செல்கின்றேன்.

வா. வம்பன்:—ஐயா! கோபித்துக்கொள்ள வேண்டாம். க்ஷவரம் பண்ணுவோர்களெல்லாம் என்னைப் போன்றவர்களல்ல? நீர் எங்குத் தேடிச்சென்றபோதிலும் எனக்குச் சமானமானவன் அகப்படமாட்டான். நான் இந்தப் பட்டினத்தில் அதிக அனுபவசாலி, எனக்கு வைத்தியம் நன்ருய்த் தெரியும், இரசவாதத்தில் மெத்த சமர்த்துண்டு, ஜோதிஷத்தில் நல்ல பாண்டித்திய முடையவன், நானுதேசத்து சரித்திரங்களையும் நன்ரு யறிந்தவன், வேதாந்த சாஸ்திரத்தில் நல்ல ஞான முண்டு. தர்ம சாஸ்திரத்தில் அதிக நிபுணன், கவி பாடுந் திறமையுண்டு. சிற்ப சாஸ்திரத்தில் நன்ருய்த் தெளிந்தவன். நான் சொல்பமானவனென்று நீர் நினைக்கப்படாது. எனக்குத் தெரியாத விஷயம் உலகத்திலில்லை. இறந்துபோன உமது தந்தையை நினைக்கும்போ தெல்லாம் எனக்குத் துக்கமதிகப் படுகின்றது. அவருக்கு என்னுடைய யோக்கியதை நன்ருய்த் தெரியும். அவருக்கு என்மேல் அதிகப்பிரீதி. அவரிடம் எனக்கிருக்கும் விஸ்வாசத்தினுல் உமக்கு நேரிடப்போகும் பலாபலன்களைச் சொன்னேன்.

தனபாலன்:—(தனக்குள்) எது! இவன் சீக்கிரத்தில் அனுப்பமாட்டான்போல் தோன்றுகிறது. (கோபமாக) அடா! முட்டக் கல்விக்கற்றக் கெட்ட நச்சுவாயா! போதும் உனது அதனப்பிரசங்கம். இந்தமட்டில் நிறுத்தி க்ஷவரம் செய்ய ஆரம்பிக்கமாட்டாயா? நீ பெரிய வாயாடியா யிருக்கின்ருயே.

வா. வம்பன்:—ஐயா! என்னை வாயாடி யென்று சொல்லுகிறீர்களே! என் குடும்பத்தில் நான் வாய்ச்செத்தவனென்று எல்லாருடைய அபிப்பிராயம். என்னுடன் பிறந்தவர்கள் நான்கு பேர்கள். மூத்தவன் பெயர் தடபுடல் தாமோதரன், இரண்டாவது தமையன் பெயர் வம்புக்கார வரதன், மூன்றுவது தமயன் பெயர் தகல்பாஜி தங்கவேலு, நான்காவது தமயன் பெயர் தருதலை மாணிக்கம். நான் எல்லாருக்கும் இளையவன். என்னை எல்லாம் மிதபாஷி யென்று சொல்லுவார்கள்.

தனபாலன்:—(தனக்குள்) ஏது இவன் இப்படியே வாயாடிக்கொண்டிருப்பான்போல் தோன்றுகிறது. (பஹிரங்கமாய்) அப்பா! உனக்குப் புண்ணியமாய்ப் போகிறது. சோப்பை மாத்திரம் என் முகத்தில் தேய்த்துவிட்டு இன்னம் க்ஷவரத்துக்கு ஆரம்பிக்கவில்லையே. போகட்டும் இதற்காக இதோ ஒரு ரூபாய்த் தருகிறேன். நான் போய் வேறே எங்கேயாகிலும் க்ஷவரம்செய்து கொள்ளுகிறேன்.

வா. வம்பன்:—ஐயா! தாங்கள் ஏன் ஆயாசப்படுகிறீர்கள். வேலையைப் பூர்த்திசெய்யாமல் நீர் கொடுக்கும் ரூபாயை நான் வாங்குவேனு? நீர் எனக்கு ஒன்றும் கொடுக்கா விட்டாலும் உங்களுடைய தயவு இருந்தால் போதுமானது. நீங்கள் என்னுடைய யோக்கியதையை நன்றுய்த் தெரிந்துகொள்ள வில்லை. இறந்துபோன உமது தந்தைக்குத் தெரியும். அவர் சில சமயங்களில் என்னைத் தமது வீட்டுக்கு அழைத்துப்போய், தமதருகில் உட்கார வைத்துக்கொண்டு என் பேச்சுகளைக்கேட்டு சந்தோஷப்படுவார். ஒரு நாள் நான் சில நீதி சாஸ்திரங்களை யெடுத்துப் பேசியபோது அவர் மிகவும் மகிழ்ந்து எனக்கு நல்ல பரிசு தந்தார். அவர் மாத்திரமல்ல; இன்னும் இப்பட்டினத்தில் இதுவரையிலும் என்னைப் புகழ்ந்து பேசாதாரில்லை

தாங்கள் என்னிடம் முதல்தரமாக இன்றுதான் வந்தமையால் என் யோக்கியதைத் தெரியவில்லை. இன்னும் போகப் போகத் தெரியவரும்.

தனபாலன்:—நீ நல்ல யோக்கியனுகவே யிருப்பாய் இனியாகிலும் பேசாமல் வேலையாகட்டும். நான் அவசரமாக ஒரு முக்கிய அலுவலாக போகவேண்டு மென்று முன்னமே சொல்லியிருக்கிறேன்.

வா. வம்பன்:—(கத்தியைத் தீட்டிக்கொண்டு) ஐயா! உமது தந்தை எந்த வேலைக்குப் போனாலும் என்னோடு ஆலோசனை செய்யாமற் போகார். நான் என்னைப் பெருமைப்படுத்திச்சொல்லவில்லை; எனது ஆலோசனையை அவர் மிகவும் மெச்சிக்கொள்ளுவார். பலவிஷயங்களில் தேர்ச்சியடைந்தவர்களுடைய ஆலோசனையைக்கேளாமல் அநேகர் தங்களுடைய வேலைகளைச் சாதிக்காமல் போகிறார்கள்.

நற்றாமரைக் கயத்தி னல்லனஞ் சேர்ந்தார்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை யுகக்கும் பிணம்."

என்றபடி, உம்முடைய சிநேகத்தை நான் விரும்பினவனுயிருக்கின்றேன்.

தனபாலன்:—(அதிக கோபத்துடன்) நீ க்ஷவரம் செய்தால் செய். அல்லது நான் இதோ எழுந்து செல்கின்றேன்.

வா. வம்பன்:—(தனபாலன் கைகளைப் பிடித்துக் கொண்டு நாற்காலியின்மேல் மறுபடியும் உடகாரச் செய்து) ஐயா! தாங்கள் மெத்த அவசரப்படுகிறீர்கள். 'ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு' "அவசரகாடிகி ஆகுலோ பெட்டு, நாகு நேலலோ பெட்டு" என்பதுபோல இவ்வளவு அவசரமா? நான் பெரிய மனிதன், தெளிந்த ஞான

மும், குணமுமுடையவன். ஆகையால் புத்தி சொல்லும் படியான சுதந்திரம் எனக்குண்டு.

**தனபாலன் :—**இனியாகிலும் உன் பிரசங்கத்தை நிறுத்து. "சிவபூஜை வேளையில் கரடி புகுந்ததைப்போல" நீ எனக்கு ஏற்பட்டாய். நான் சீக்கிரமாய்ப் போகவேண்டு மென்று ஒருமணி நேரமாகச் சொல்லுகிறேன். முன்னம் க்ஷவரம் செய்தாகவேண்டும்.

**வா. வம்பன்:—**ஐயா! நான் க்ஷவரம் செய்து இதோ முடித்துவிடுகிறேன். ஆனால் நீர் போகப்போகிற வேலையைக் குறித்து நன்றாய் ஆலோசனை செய்திருக்கமாட்டீரென்று நினைக்கின்றேன். யோசிக்காமல் யாதொரு வேலையிலும் பிரவேசிக்கலாகாது. எப்படியெனில், ஒரு வாள்காரன் வாளினால் பாதிவரையில் அறுத்து நடுவில் ஓர் ஆப்பைச் சொருகிவிடப்பட்டிருந்த ஒரு மரத்தின்மேல் ஒரு குரங்கு ஏறி ஆப்பைப் பிடுங்கினவுடன் அதன் பீஜங்கள் அம்மரத்தின் நடுவில் சிக்கிக்கொண்டு நசுங்கினமையால் அக்குரங்கு உயிர்விட்டது. ஆகையால் யோசித்தே பிறகு எக்காரியத்திலும் தலையிடல் வேண்டும். நீர் சொல்லுகிற அவ்வளவு அகத்தியமான வேலையென்ன? தயைசெய்து என்னிடம் தெரிவித்தால் அதைப்பற்றி என் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறேன். தவிர நீர் 11-மணிக்குப் போகவேண்டியவர்தானே. இன்னம் இரண்டுமணி நேரம் சாவகாசமாயிருக்கலாம்.

**தனபாலன்:—**குறித்த காலத்தில் போகவேண்டுமானால் முன்னதாகவே ஆயத்தப்பட்டிருக்க வேண்டியது கடமையன்றோ? தயைசெய்து சீக்கிரம் க்ஷவரம்செய்.

**வா. வம்பன்:—**(கத்தியைத் தீட்டி அடப்பத்தில் வைத்து, வெளியே சென்று சூரியனைப் பார்த்து மறுபடியும் உள்ளேவந்து உட்கார்ந்து ஒருபக்கம் க்ஷவரம்செய்து,

மறுபடியும் கத்தியைக் கீழேவைத்து) என்ன ஐயா! சூரியன் ஆகாயத்தில் 3-மார் உயரத்தில்தான் வந்திருக்கிறுன். சரியாய் மணி இப்போது 9-தான். இன்னும் பூராவாக இரண்டு மணி சாவகாசமிருக்கிறது.

தனபாலன்:—என்ன! நீ பெரிய வாயாடியாயிருக்கின்ருயே, வேலையாகட்டும்.

வா. வம்பன்:—ஐயா, நான் மிதபாஷியென்று முன்னமே தெரிவித்திருக்க மறுபடியும் வாயாடி என்று என்னை மதிக்கிறீர்களே. என் விருத்தாந்தத்தையும் என் தமையன்களுடைய சரித்திரத்தையும் கேட்பீராகில் உண்மை உங்களுக்குத் தெரியவரும். ஒருவாறு சுருக்கிச் சொல்லுகிறேன் கேளும்;—நான் ஒருநாள் பண்டரிபுரம் போய்க்கொண்டிருக்கையில் வழியில் ஓர் ஆற்றைக்கடக்க நேரிட்டது. அப்போது ஜனங்கள் ஏறியிருந்த ஒரு படகில் யானும் ஏறினேன். ஆனல் அப்படகிலிருந்தவர்களில் இரண்டு போலீஸ்காரர்கள் இருந்தனர். அக்கரை சேர்ந்ததும் அங்கு இப்படகுக்காகக் காத்திருந்த சில போலீஸ் உத்தியோகஸ்தர்கள், அப்படகிலிருந்தவர்களை ஒருமிக்கச் சேர்த்து உருவின கத்திகளுடன் நடத்திக்கொண்டு ஒரு நியாயாதிபதியினிடம் கொண்டுபோய்விட்டு, "ஐயா! ஒரு மாதத்திற்குமுன் ஒரு கொலையின் நிமித்தம் கொலை தண்டனை விதிக்கப்பெற்று தப்பியோடியிருந்த பத்து நபர்கள் தான் இவர்கள்; இவர்களை மிகுந்த கஷ்டத்துடன் பிடித்து வந்தோம்" என்ருர்கள். ஐயா! வாலிபரே! நானும் அக்கூட்டத்திலிருந்தபடியால் எனக்கு என்ன சம்பவிக்குமோ என்கிற ஏக்கம் கொஞ்சமும் எனக்கில்லை. உடனே நியாயாதிபதி கொலை செய்பவர்களைக்கூப்பிட்டு இந்தப் பத்துப் பேர்களுடைய தலையையும் வெட்டிவிடும்படி உத்தரவுசெய்தார். நான் மெத்த மிதபாஷியானதால் அப்போது கூட

என் விருத்தாந்தத்தையெடுத்துச் சொல்லி, நான் தப்பித்துக்கொள்ளும் மார்க்கத்தைத் தேடவில்லை. நான் கடைசியில் நின்றிருந்தபடியால், கொலைசெய்பவன் முதலிலிருந்து வரிசையாக 10-பேர் தலைகளை வெட்டின பிறகு சும்மா நின்றான். உடனே நியாயாதிபதி கொலை செய்வோனை நோக்கி "ஏன் என் உத்திரவை நிறைவேற்றவில்லை. இன்னொருவன் நிற்கிறானே; அவன் தலையைவெட்ட என்ன அவகாசம்?" என்றார். ஐயா! இப்போதாகிலும் நான் குற்றவாளியல்லவென்று தப்பித்துக் கொள்ளலாமல்லவா? ஆனால் நான் ஒன்றும் வாயைத் திறந்துபேசவில்லை. இதனாலேயே நான் எவ்வளவு மிதபாஷியென்று உமக்குத் தெரியவில்லையா? பிறகு அக்கொலையாளி நியாயாதிபதியை நோக்கி, "பிரபோ! நான் சரியாக 10-குற்றவாளிகளையும் வெட்டிவிட்டேன். இதோ பாரும் 10-தலைகள் கீழே உருண்டு கிடக்கின்றன. இதோ கடைசியில் நிற்கிறவன் யாரோ தெரியவில்லை" என்றான். நியாயாதிபதி என்னைப் பார்த்து, "நீயார்? இந்தக் குற்றவாளிகளுடன் நீ எப்படிச் சேர்ந்தாய்" என்றார். நான் படகேறினதுமுதல் அங்குவந்து சேர்ந்தவரையில் நடந்த சங்கதியைச் சொல்லவே, நான் மிகவும் பொறுமைசாலியென்றும், வலியப் பேசுபவன் அல்லவென்றும் நியாயாதிபதி என்னை மெச்சிக்கொண்டு என்னைப் போகும்படி உத்தரவு செய்தார். இதனாலேயே நான் எவ்வளவு மிதபாஷி என்பது உங்களுக்குத்தெரியவில்லையா? என் மூத்ததமையனை தடபுடல் தாமோதரன் எப்படிப்பட்டவனென்பதை இரண்டு நிமிஷத்தில் சொல்லிவிட்டு உம்முடைய க்ஷவரத்தைப் பூர்த்தி செய்கிறேன்.

தடபுடல் தாமோதரன், பெற்றவர்களுடைய பேச்சைக்கேளாமல், துஷ்ட சிநேகிதர்களுடன்கூடி நாடோடி

யாய்த் திரிந்து கடைசியில் பாம்பாயிக்குச் சென்று அங்கோர் பலகாரக்கடையில் கூலிக்கு வேலைசெய்து ஜீவித்து வந்தான். பிறகு, சொந்தமாக ஒரு கடைவைக்க எண்ணி எங்கெங்கையோ கொஞ்சம் ரூபாய் கேட்டும் கிடைக்கவில்லை. ஒரு நாள் தான் வேலைசெய்யும் கடையின் சொந்தக்காரன் தன் பணப்பையைக் கீழேவைத்துவிட்டுத் தூங்கினான். தடபுடல் தாமோதரன் அந்தப் பணப்பையை மெதுவாகக் களவாடி அவ்வூரைவிட்டு அதிக துரிதமாக நடக்க ஆரம்பித்து நான்குநாளில் ஆக்ராபட்டணம் சேர்ந்தான். பையில் இருந்த 10-ரூபாயில் 2-ரூபா வழிச் செலவுபோக மீதி 8-ரூபாயுடன் ஓர் சத்திரத்தில் படுத்துத் தூங்கிக்கொண் டிருக்கையில் அந்தப் பையை யாரோ திருடிச்சென்றனர். மறுநாள் கடைத்தெருவிற்குச்சென்று அங்கிருக்கும் கடைகளில் பம்பாய் மிட்டாய்களைப்போல் ஒரு கடையிலும் இல்லை. அங்குள்ள சில பெரிய மனிதர்களைநேசித்துக் கொஞ்சம்பொருள் சம்பாதித்துக்கொண்டு ஒரு பலகாரக் கடைவைக்க எத்தனித்தான். இதற்காகப் பணம் கொடுத்து உதவியவர்களும், ஏனையோரும் பம்பாய் மிட்டாயை இதுவரையிலும் பார்த்திராதவ ரானபடியால் எப்போது இவன் கடைவைப்பான் பார்ப்போமென்று ஆவலாய்க் கார்த்திருந்தார்கள். அப்படியிருக்க மாலை 6-மணிக்கு தடபுடல் தாமோதரன் 3-கண்ணாடி ரசகுண்டுகளைக் கொண்டுவந்து அந்த கடையின் இருபக்கங்களிலும் தூக்கிக்கட்டி, அவைகளுக்கிடையில் 3-குளோப்பு இலாந்தர்களை மாட்டி விளக்குகளைக் கொளுத்திவிட்டான். பலகைகளைக் கொணர்ந்து ஒன்றின்மேல் ஒன்றாய் படிப் படியாய் வைத்து அதன்மேல் மெல்லிய வெள்ளைத் துணியைப்போட்டு அதன்மேல் வரிசையாக லட்டு, சிலேபி, பூந்தி, பதர்பேணி, மைசூர்பாக், பாதுமை அல்வா, பால்

கோவா, கஜுரா, கிரி இன்னும் பலதினுசுகளைப் பளபளப் புள்ளப் பித்தளைத் தட்டுகளில் வைத்துக் கடைநிரைய நிரப்பி, அதன்பின்னுல் ஒரு கல்லாபெட்டியின்மேல் தன் கையில் திராசைப் பிடித்தவண்ணம், மெல்லிய சொக்காய் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான். பார்க்கும் ஜனங் களுக்கு இது விநோதமா யிருந்தபடியால் அநேகர் அந்த மிட்டாய்களை வாங்கிச் சாப்பிட்டு ஆனந்தமடைந்தார்கள் ஜனங்கள் வழக்கமாய் தடபுடல் தாமோதரன் கடைக்கே வந்து மிட்டாய்த்தினுசுகள் வாடிக்கையாய்வாங்கஏற்பட்ட படியால் மற்றக் கடைக்காரர்களெல்லாம் கொஞ்சநாட் யளில் கடைகளை மூடிவிடும்படி நேரிட்டது. தடபுடல் தாமோதரனுக்கும் வியாபாரம் அதிகரித்துக் கையிலும் ஏறக்குறைய நாலாயிரரூபாய் சேர்ந்துவிட்டது.

"குணமிருந்தாலும் குலமிருந்தாலும் கொழுங்கலைஞர்
வணமிருந்தாலும் மதியிருந்தாலும் வழுத்திடுவெங்
கணமிருந்தாலும் பணமிலேல் யாருக்கருதலர் அப்
பணமிருந்தால் அவர்க்கெல்லாரு மஞ்சலிபண்ணுவரே."

என்றபடி சில கனவான்களுடைய நட்பும் இவனுக்குக் கிடைத்துவிட்டது. இவனுடைய நடையுடைபாவனைகளும் வேறுமாதிரியாய்விட்டன. இங்ஙனமிருக்க இவன் கடைக்கு எதிரில் ஒரு பெரிய வீடு உண்டு. அவ்வீட்டிற் குடையவன் ஒரு பயிரிடும் குடியானவன். அக்குடியான வனுடைய மனைவி மிகவும் ரூபாவதி. நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பவைகளில் ஒழுகுபவள். இவ் வுத்தமி பிரதிதினமும் சாயங்காலவேளையில் வீட்டு உப்பரி கையின்மேல் காற்றுக்காக உட்காருவது வழக்கம். தட புடல் தாமோதரன் தன் கடையிலிருந்து அந்த அம்மா ளையே பார்த்துக்கொண்டு, தன்வியாபாரத்தையும்சரியாய் கவனிக்காமலிருப்பான். அகஸ்மாத்தாக இவனுடைய

கடையை அந்த அம்மாள் பார்த்துவிட்டாலோ தன்மேல் அம்மாது இஷ்டப்பட் டிருப்பதாக தாமோதரன் நினைத் துக்கொள்வான். இப்படிச் சிலநாள் கடந்த பிறகு தன் கடையி லிருக்கும் ஓர் பையனிடம் நல்ல மிட்டாய்களில் சிலதை ஓர் தட்டில்வைத்து அம்மாதினிடம் அனுப்பினன். அவ்வுத்தமி இதைத் தன் புருஷனுக்கனுப்பிப் பிரதி தின மும் தன்னை அக்கடைக்காரன் பார்த்துக்கொண்டு வருவ தையும் தெரிவித்தனள். தடபுடல் தாமோதரன், அப்பதி விரதையின் குணம் இன்னதென்று உணராமல் தன்னைப் பார்ப்பதினுலேயே தன்மேல் இச்சைவைத் திருப்பதாய் நினைத்து, பிரதிதினமும் நல்லமிட்டாய் தினுசுகளை அம்மா தின் வீட்டுக்கு அனுப்பி வந்தான். ஒருநாள் குடியானவன் ஒருவனை தாமோதரனிடம் அனுப்பித் தன்வீட்டுக்கு வரும் படி அழைத்தான். தாமோதரனுக்கு அளவிடாத ஆநந் தம் வந்தது. தினந்தோறும் தன்னைப் பார்த்து இச்சை யதிகரித்தமையால் தன் கணவனுக்கு அவனைச் சிநேகம் செய்வித்துப் பிறகு தன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்து கொள்ள எண்ணித் தன் புருஷன் மூலமாக வரவழைத்தா ளென்று யோசித்து, நல்ல உடுப்புகளை அணிந்து குடியான வன் வீட்டிற்குச் சென்றுன். அவனும் இவனைக் கண்ட வுடன் மரியாதையாய் உட்காரச் செய்து, சற்றுநேரம் பேசிய பிறகு இரவு அவனுக்கு விருந்தளிக்க உத்தேசித் திருப்பதை அறிவித்தான். தடபுடல் தாமோதரன் அன்று கடையையும் திறக்காமல் இரவு 10-மணிவரையிலும் அங்கே யேயிருந்து, அக்குணவதி அறுசுவையன்னம் பரிமாற இவ னும் புன்சிரிப்புடன் வெகு சந்தோஷமாய்ப் புசித்தான். ஏதாகிலும் தன்னுடன் அவள் ஒரு பேச்சாகிலும் பேச மாட்டாளா என்று அவன் எதிர்பார்த் திருந்ததற்கு அவ் வுத்தமியும் “கொஞ்சம் பதார்த்தம் வைத்துக்கொள்ளுங்

கள், கூச்சமில்லாமல் சாப்பிடுங்கள்'' என்னும் இனிய வார்த்தைகள் சொல்லிக்கொண்டே பரிமாறினாள். அவ் வார்த்தைகளைக் கேட்கவே தாமோதரனுக்கு ஆனந்தம் அதிகரித்தது. சாப்பிட்டானதும் குடியானவனும் தாமோதரனும் தாம்பூலம் தரித்தனர். தாமோதரனை அங்குத் தானே படுத்துக்கொள்ளும்படி குடியானவன் வேண்டினன். தன்னெண்ணம் கைகூடிற்றென்று தாமோதரன் அங்குத் தனக்கென்று நியமித்த படுக்கையில் சயனித்துக் கொண்டான். ஆனால் அவன் தூங்கினவனல்ல. ஏனென்றால் தூங்கிவிட்டால் அவள் வந்து எழுப்பும்போது தெரியாமற்போய்க் காரியம் கெட்டுப்போகும், ஆகையால் நித்திரைச் செய்யலாகாதென்று நினைத்துக்கொண்டு விழித்திருந்தான். குடியானவன் இரவு 3-மணிக்கு எழுந்து தாமோதரனண்டைவந்து, "ஐயா! உமக்குத் தூக்கம்பிடிக்கவில்லைபோற் றோன்றுகிறது, வயல் வெளிக்கு உல்லாசமாய்ப் போய்வரலாமே'' என்று தாற்றுக்கோல், வடக்கயிறு, நுகத்தடி, சால் முதலியவைகளை எடுத்துக்கொண்டு தாமோதரனையும் அழைத்துக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டான். தாமோதரன், குடியானவன் சுமந்து செல்லும் வடக்கயிறு, கலப்பை முதலியவைகளைத் தான் வாங்கிக்கொண்டு தலைமேல் வைத்துச் சுமந்து இருவரும் வயலண்டைச் சேர்ந்தார்கள். குடியானவன் முன்னதாகவே ஏற்பாடு செய்திருந்தபடி பண்ணைக்காரச் சிறுவன் கவலைமாடு ஒன்றை ஓட்டிக்கொண்டு அங்குள்ள கிணற்றண்டைவந்து சேர்ந்தான். குடியானவன் அவனை நோக்கி, "அடா! இரண்டுமாடுகளை ஓட்டிக்கொண்டு வராமல் ஒன்றைக் கொண்டுவந்தனையே, எப்படிக் கவலை ஓட்டித் தண்ணீர் இறைப்பது?'' என்று கேட்டான். அதற்கு அச்சிறுவன், "ஐயா! இன்னொரு மாட்டிற்குக் காலில் அடிப்பட்டு

நடக்கமுடியாமலிருக்கிறது. ஆகையால் ஒன்றை ஓட்டிக் கொண்டுவந்தேன்" என்றான். குடியானவன், என்னடா மோசமாய்விட்டதே. இன்றையதினம் தண்ணீர்ப்பாய்ச்சா விட்டால் பயிர் உலர்ந்துவிடுமே. இதற்கு என்ன செய்வது என்று மிகவும் விசனப்பட்டான். உடனே தாமோதரன் குடியானவனைப் பார்த்து, "ஐயா! நீர் ஏன் இப்படி விசனப் படுகிறீர். எப்படியும் ஒரு பக்கத்திற்கு மாடு இருக்கின் றது; மற்றொரு பக்கம் நான் இருக்கிறேன். எப்படியாகி லும் தண்ணீர் பாய்ச்சிவிடலாம். இதற்காகத் தாங்கள் ஆயாசப்படுவானேன்" என்றான். அதற்குக் குடியான வன், ஐயா! தாங்கள் என் வீட்டிற்கு விருந்தினராக வந்திருக்க உங்களைச் சந்தோஷப்படுத்தி அனுப்பவேண்டிய தற்குப் பதிலாக நான் வேலையிடலாமா? நான் இன்றைக் குக் கழனிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சாவிட்டால் அதிக நஷ்டமென்பதற்குத் தடையில்லை. நான் என்ன செய்ய வேண்டுவதும் எனக்குத் தோன்றவில்லையே! ஐயோ! பயிர்கள் இன்று உலர்ந்து போய்விடுமே. நான் என்ன செய்வேன்?" என்று பரிதாபப்பட்டான். தாமோதரன் உடனே, "ஐயா! மனித ஜன்மமெடுத்த ஒவ்வொருவரும் யாருக்காவது கஷ்டம் நேரிடப்பார்த்தால் உடனே சகா யம் செய்யவேண்டும். அதிலும் உம்முடைய வீட்டில் அன்னமருந்தி உமக்குச் சகாயஞ்செய்யாம லிருக்கலாமா? ஒரு எருது இல்லாமையால் இன்று உமக்கு அதிக கஷ்டத் துக்கு ஏதுவாகிறது. ஆகையால் நான் மற்றொரு எருதுக் குப் பதிலாக நுகத்தடியைப் பிடித்துக்கொண்டு போகி றேன். உமது வேலையைத் துவக்குங்கள்" என்றான். குடி யானவன் ஒரு மாட்டை இடதுபக்கம் நுகத்தடியில் பூட்டி, வலதுபக்க நுகத்தடியண்டை தாமோதரனை நிறுத்தி, மாட் டுக்குப் போடும் தோலினாற்றைத்த வாய்மூடியினால் அவன்

மூக்கையும் வாயையும் சேர்த்துப்போட எத்தனித்தான். அப்போது தாமோதரன், என்ன ஐயா! தோல்வாரைக் கொண்டு என் வாயையும் மூக்கையும் கட்டுகிறீரே'' என்ருன். "இது போடாவிட்டால் மாடு சரியாய்ப் போகாது. ஆகையால் அதைப் பூட்டுகிறேன்'' என்று குடியானவன் சொல்ல, தாமோதரன் ஆம் அது உண்மையாயிருக்கலாம். ஆனல் என்னையொத்த மனிதனுக்குமா அதைப் போடுவது என்ருன். குடியானவன், "ஐயா! நீர் சொல்லுகிறபடி மனிதருக்கல்லாமற்போனபோதிலும், நுகத்தடியில் எந்தப் பிராணியைக் கட்டினலும் இந்தத் தோல்வாரைப் பூட்டித் தானுகவேண்டும். அது உங்களுக்குக் கஷ்டமாகத் தோன்றும்பட்சத்தில் நுகத்தடியை விட்டுவிடுங்கள். இதற்காகத் தான் நான் முன்னதாகவே இந்தத்தொழிலில் தங்களுக்குத் தகாதென்றேன்' என்று மிகமனஸ்தாபமாய்ச் சொன்னுன். குடியானவன் கோபித்துக்கொண்டால் தன்காரியம் கெட்டுப்போகுமென்று தாமோதரன் குடியானவனை நோக்கி, "ஐயா! நான் அப்படி அந்தத்தோல்வாரைமாட்டவேண்டாமென்று சொல்லவில்லை. அவசியம் அது போட்டுத்தான் ஆகவேண்டுமென்ருல் தடையின்றி எனக்குப் போடுங்கள். நான் அதற்காக வருத்தப்படவில்லை. எப்படியாகிலும் கழனிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டியதுதான் எனது எண்ணம். ஆகையால் சீக்கிரம் வேலையை ஆரம்பியுங்கள்'' என்ருன். குடியானவன் அந்தத் தோலினல் தாமோதரனுடைய மூக்கையும்வாயையும்கட்டி அதிலிருந்து வேருேர் தோல்வாரினல் இரண்டு காதுகளையும் சுற்றி அதன் நுனியைத் தன் கையில் பிடித்துக்கொண்டு நுகத்தடியையெடுத்து அவன் கழுத்தின்மேல்வைத்தான். தாமோதரன் "இந்த நுகத்தடியைக் கையில் பிடித்துக்கொண்டால் போகாதா? அதைக் கழுத்தின்மேல் வைக்கின்றீர்களே?

என்று அக்குடியானவனைக்கேட்டான். அதற்கு அவன் "கையில் நுகத்தடியைப் பிடித்துக்கொண்டு எவ்வளவு நேரம் இழுக்க முடியும். கழுத்தின்மேல் வைக்காமற் போனால் வேலையாகாது. உங்களுக்குக் கஷ்டமாயிருக்கும் பட்சத்தில் விட்டுவிடுங்கள்" என்றான். அதற்கு தாமோதரன் அப்படியா! நான் அதற்காகச் சொல்லவில்லை. உங்களுக்கு எப்படிச்செய்தால் அனுகூலமோ அப்படிச் செய்யுங்கள்" என்று சொன்னதும் குடியானவன், தாமோதரன் கழுத்தின்மேல் நுகத்தடியை வைத்து, அதற்கும் இவன் கழுத்திற்கும் தோல்பட்டையைப் போட்டுக் கட்டினான். தாமோதரனுக்குக் கழுத்து இறுக்கவே அவன் "என்ன ஐயா! என் தொண்டை நோகும்படி அவ்வளவு அழுத்தமாய் கட்டுகிறீரே" என்றான். அதற்குக் குடியானவன் "முதலில் அப்படித்தானிருக்கும், போகப்போகச் சரிப்பட்டுப்போகும். இப்போது நீர் நின்றுகொண்ட வண்ணம் கவலையை இழுக்க ஆரம்பித்தால் மாடிருக்கும்பக்கம் தாழ்ந்திருத்தலால் வேலைசெய்ய முடியாது. இவ்வளவுக்கும் ஒப்புக்கொண்ட நீர் இன்னும் ஒரு காரியம் செய்ய வேண்டும். அதாவது, மாட்டைப்போல் நீரும் குனிந்து கொண்டு இரண்டு கைகளையும் கீழே ஊன்றிக்கொண்டு போகவேண்டும்" என்றான். "என்ன ஐயா! குனிந்தபடியே இரண்டுகைகளையும் ஊன்றிக்கொண்டு எவ்வளவு நேரம் வேலைசெய்யமுடியும்?" என்று தாமோதரன் கேட்டான். குடியானவன் "ஐயா! இதற்காகத்தான் முதலிலேயே தங்களால் முடியாதென்று சொன்னேன். உமக்கிஷ்டமில்லாவிடில் இதோ அவிழ்த்து விடுகிறேன்" என்றான். அப்போது தாமோதரன், குடியானவனுக்குக் கோபம் வந்ததென்றெண்ணி "ஐயா! இதோ நான் குனிந்துக்கொண்டு கைகளை ஊன்றிக்கொண்டேன். நீங்கள்

வேலையை ஆரம்பிக்கலாம்'' என்றான். கிணற்றில் சால் நிறைய தண்ணீர் நிரம்பியதும் குடியானவன் இடது பக்கத்து மாட்டை அதட்டி ஓட்டினான். வலது பக்கம் மாடு இராமல் மனிதனை யிருக்கிறபடியால் அந்த மாடு மிரண்டு முன்னும் பின்னும் இழுத்தது. தாமோதரனுக்கு கழுத்து நோக ஆரம்பிக்கவே, "என்ன ஐயா! இந்த மாடு சரியாய் இழுக்காமையால் என் கழுத்து நோகின்றதே" என்றான். "முதலில் அப்படித்தானிருக்கும்,' வரவர சரிப்பட்டுப்போகும்'' என்று குடியானவன் சொல்லி, மாட்டை அதட்டி, கையிலிருந்த தாற்றுக்கோலினால் ஓங்கி ஒரு அடி அடித்து, வலதுபக்கமிருந்த தாமோதரனையும் பளீரென்று முதுகின்மேல் பலத்த அடி அடித்து ஓட்டினான். தாமோதரன், ஒவென்றிரைச்சலிட்டு "என்னை ஏன் ஐயா இப்படி அடித்தீர்?'' என்றான். அதற்குக் குடியானவன், "அட! அட! உங்களையுமா நான் அடித்துவிட்டேன். இரண்டுபக்கமும் ஓட்டி மாட்டையடிக்கும் வழக்கமாய் உங்களையும் அடித்துவிட்டேன். தாங்கள் மனவருத்தப்படவேண்டாம். உங்களுக்கு இஷ்டமில்லாதிருந்தால் அவிழ்த்து விடுகிறேன்'' என்றதும் தாமோதரன் "எனக்கொன்றும் வருத்தமில்லை; வேலையாகட்டும்'' என்றான்.

---

## அத்தியாயம் 6

### தடபுடல் தாமோதரன் மரணமடைதல்.

தனபாலன்:—என்ன ஐயா! உன்னிடம் நான் க்ஷவரம் செய்துகொள்ள வந்ததற்கு என்னை அதிக கஷ்டத்துக்குள்ளாகும்படிச் செய்தீர், நான் அவசரமாகப் போக வேண்டும். நீர் உம்முடைய ஒரு சகோதரனுடைய சங்கதியைச் சொல்ல ஆரம்பித்து இன்னும் முடியவில்லையே. இத்துடன் நிறுத்தி என் வேலையாகட்டும். நான் நாளைய

தினம் இங்குவந்து மற்றச் சங்கதிகளை நிதானமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வா. வம்பன்:—ஏன் ஐயா! இப்படி அவசரப்படுகிறீர்கள்? நீர் போகவேண்டிய காலம் இன்னும் சமீபிக்கவில்லை. இப்போதுதான் 10-மணியாயிற்று.

என்று சொல்லிக் கொஞ்சம் க்ஷவரம்செய்து மறுபடியும் கத்தியைக் கீழே வைத்துவிட்டுச் சொல்லத்தொடங்கினன்:—குடியானவன், இடதுபக்கத்திலிருக்கும் மாட்டை அதட்டித் தாற்றுக்கோலினல் நாலடி நன்ருயடித்து வலதுபக்க மிருந்த தாமோதரனையும் பளிச்சுப் பளிச்சென்று நாலைந்து அடி பழுக்கப் பார்த்தான். தாமோதரன் அவ்வடிகளினுல் குய்யோ முறையோவென்று அலறி, "என்ன ஐயா! இப்படி அடித்துவிட்டீரே, முன்போல மறதியாய் அடித்துவிட்டதாகத் தெரிகிறதே என்னல் பொறுக்க முடியவில்லையே" என்ருன். "தம்பி! விசனப்படாதீர். நான் மறந்துவிட்டேன். உமக்குக் கஷ்டமா யிருந்தால் சொல்லுங்கள், வேலையை நிறுத்திவிடுகிறேன்" என்று குடியானவன் சொல்ல, தாமோதரன் "ஐயா! தாங்கள் இதற்காக ஆயாசப்படவேண்டாம். வேலையை நடத்துங்கள்" என்ருன். குடியானவன் அதட்டி அதட்டி சுமார் 50-சால் இறைத்தான். தாமோதரன் பாடு இதுவரைக்கும் ஓய்ந்து போய்விட்டது. களைத்துநிற்க ஆரம்பித்தான். அப்போது குடியானவன், "அப்பா! இந்தச் சமயம் நீர் நின்ருல் இதுவரையில் கஷ்டப்பட்டும் உபயோகமில்லாமற் போய்விடும். மேலும், மேலும் இன்னும் 100-சால் இறைத்தால்தான் தண்ணீர் ஏறிப் பாயும். இராவிட்டால் இதுவரையில் இறைத்த நீர் வாய்க்காலில்தான் நின்றுவிடும்" என்று சொல்லிக்கொண்டே தாற்றுக்கோலிலுள்ள முள்ளினுல் தாமோதரனுடைய புட்டங்களில் அழுத்தி இரத்தவெள்ள

முண்டாகும்படி பல தடவைகளில் குத்தி, அவன் என்ன கூக்குரலிட்டுக் கதறியும் செவிகொடாமல், "பத்தினியை இச்சித்த பரம சண்டாளனுக்கு இதுதான் சிட்சை" என்று சொல்லிக்கொண்டே அவன் முதுகிலும் இரத்தம் வடியும் படியாக அடிமேலடி பலங்கொண்ட வரையில் பொத்தினான். தாமோதரன் பதைபதைத்து மூர்ச்சையாய்க் கீழே விழுந்துவிட்டான். குடியானவன் நுகத்தடியை அவிழ்த்து, மாட்டை அப்புரப்படுத்தி, தாமோதரனிடம் வந்து பார்த்தான். அவன் பிராணன் போய்விட்டது. உடனே அங்கொருபள்ளம் வெட்டி அதில் அவனைப் புதைத்துவிட்டான். இவ்வாருக என் மூத்த தமையனுடைய கதை முடிந்துவிட்டது. இரண்டாவது தமையனான வம்புக்கார வரதன் சென்னையில் ஒரு அரிசி மண்டியில் கூலிவேலை செய்துகொண் டிருந்தான். இவனுடன் சுப்பண்ணன் என்னும் மற்றோர் கூலியாளும் இருந்தான். சுப்பண்ணன் இராணிப்பேட்டையில் இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு தனவானுடைய குமாரத்தியை விவாகம் செய்துகொண்டான். அப்பெண் தகுந்தவயதை யடையாமலிருந்தமையால் தாய் வீட்டிலேயே யிருந்தனள். சுப்பண்ணன் கூலிவேலை செய்து ஜீவித்து வந்தான். ஒரு நாள் இவனுக்கு மாமனாரிடமிருந்து கடிதம் வந்தது. இவனுக்குப் படிக்கத் தெரியாதாகையால் வம்புக்கார வரதனிடம்காண்பித்தான். அவன் அதை வாசித்து "என்ன சுப்பண்ணா! உனக்கு அதிர்ஷ்டம் வந்துவிட்டது. உனது மனைவி பருவமடைந்திருக்கிருளாம். ஆகையால் உன்னை உடனே வரும்படியாக உன் மாமனார் எழுதியிருக்கிரூர். நீ சீக்கிரம் புறப்பட்டுப் போக எத்தனிக்க வேண்டியது. நானும் இராணிப்பேட்டையைப் பார்க்க நெடுநாளாய் விரும்பியிருப்பதால் உன்னுடன்வர விரும்புகிறேன்" என்றான்.

சுப்பண்ணு தன் எஜமானிடம் விடை பெற்றுக்கொண்டு கைசெலவுக்காக ஒரு ரூபாய் கடனுகப்பெற்று, மாமனுர் வீட்டுக்குப் போகிறபடியால் அதற்குத் தகுந்த உடையில்லாமையால் அவரைக்கேட்டு மேலே போர்த்துக்கொள்ளும் சால்வை யொன்றை இரவலாக வாங்கிக்கொண்டு புறப்பட்டான். என் தமையனுன வம்புக்கார வரதனும் அவனுடன் கூடப் புறப்பட்டான். இருவரும் அன்றிரவு இராணிப்பேட்டையைச் சேர்ந்தார்கள். இரவு 10-மணியாய் விட்டபடியால் ஊரில் நிச்சப்தமாயிருந்தது. சுப்பண்ணனுடைய மாமனுர் வீட்டில் கதவை யடைத்து எல்லாரும் தூங்குகிறுர்கள். சுப்பண்ணு இரண்டுதரம் கதவைத்தட்டி, மாமா! மாமா! என்றுன். அவர்கள் நல்ல தூக்கத்திலிருந்தபடியால் கதவைத் திறக்கவில்லை. சுப்பண்ணனும் வம்புக்கார வரதனும் தெருத்திண்ணையின்மேல் சயனித்துக் கொண்டார்கள். அன்று வழிநடந்த இளைப்பால் இருவரும் மறுநாள் சூரியோதயம் வரையில் தூங்கிக்கொண்டிருந்து பிறகு ஜனங்கள் நடமாடும் அரவம் கேட்டு விழித்துக் கொண்டனர். அவ்வீட்டு மருமகப்பிள்ளை வரப்போகிருரென்று அண்டையயலில் உள்ள யாவருக்கும் தெரியுமாகையால் வீதியில் போய்க்கொண்டிருந்த ஒருவர் சாமானிய உடையுடனிருந்த வம்புக்கார வரதனை நோக்கி, "ஐயா! இந்த வீட்டு மருமகப்பிள்ளை இவர்தானு?" என்றுர். அதற்கு வம்புக்கார வரதன், "ஐயா! இந்த வீட்டு மருமகப்பிள்ளை இவர்தான், ஆனுல் சால்வை மாத்திரம் இரவல்" என்றுன். அவர் சிறித்துக்கொண்டே போன பிறகு சுப்பண்ணன் வம்புக்கார வரதனைநோக்கி, 'என்ன அப்பா! சால்வை இரவலென்று சொல்லலாமா? என் மானத்தை வாங்கவா நீ என்னுடன் வந்தது? என்னைக் கௌரவிக்காமல் இப்படியும் சொல்லலாமா?" என்றுன். அதற்கு வம்புக்,

கார வரதன். "சிநேகிதா! ஞாபகமில்லாமல் உண்மையைச் சொன்னேன். இனி ஜாக்கிரதையா யிருப்பேன். நீ கோபித்துக் கொள்ளாதே" என்றான். வீதியில் செல்லும் மற்றோர் மனிதன் வம்புக்கார வரதனைப் பார்த்து, "இந்த வீட்டு மருமகப்பிள்ளை இவர்தானா?" என்றான், "ஆம் ஐயா! இந்த வீட்டு மாப்பிள்ளை இவர்தான். ஆனால் சால்வை மாத்திரம் சொந்தம்" என்றான். அம்மனிதன் சிரித்துக் கொண்டே போனபிறகு சுப்பண்ணன் வம்புக்கார வரதனை அதிகமாகத் திட்டி, "என்னடா! மடையனா யிருக்கிறாய் சால்வையின் பிரஸ்தாபத்தை ஏன் எடுக்கிறாய்?" என்றான். ஐயா! இனி சால்வையின் பிரஸ்தாபத்தை எடுப்பதில்லை" யென்று வம்புக்கார வரதன் சொல்லிய சற்றுநேரத்திற்கெல்லாம் மற்றோர் மனிதன் வந்து, "ஐயா! இந்த வீட்டு மருமகப்பிள்ளை இவர்தானா?" என்றான். உடனே வம்புக்கார வரதன் "ஆம் ஐயா! இந்த வீட்டு மருமகப்பிள்ளை இவர்தான். ஆனால் அவர் போர்த்துக்கொண் டிருக்கும் சால்வையின் பிரஸ்தாபம் இல்லை" என்றான். அம்மனிதனும் சிரித்துக்கொண்டே போனபிறகு சுப்பண்ணன் வம்புக்கார வரதனை அதிகமாகத் தூஷித்ததின் பேரில் இருவரும் கைகலந்து சண்டையிட்டுக்கொண்டு உருண்டு புரண்டு கொண் டிருக்கையில் சந்தடியினால் சுப்பண்ணனுடைய மாமனார் முதலானவர்கள் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்து சண்டையை விலக்கி மருமகனை வீட்டுக்குள் அழைத்துக்கொண்டு போனார்கள். என் தமையனான வம்புக்கார வரதன் அவ்வூரை விட்டுத் தன்னிருப்பிடம் திரும்பினான். ஆகையால் ஐயா! அவனல்லவோ வாயாடி? என்னை நீர் வாயாடி என்று சொல்லுகிறீர்களே என்று மறுபடியும் எழுந்து பொழுதைப் பார்த்து, ஐயா! இன்னும் நீர் போகவேண்டிய காரியத்திற்கு ஒருமணி சாவகாச

யிருக்கின்றமையால் என்னுடைய மூன்ருவது தமையனுன தகல்பாஜி தங்கவேலு என்பவனுடைய சவிஸ்தாரத்தை இரண்டு மூன்று வார்த்தையில் முடித்துவிடுகிறேன்.

---

## அத்தியாயம் 7.

### தகல்பாஜி தங்கவேலின் சரித்திரம்

**தனபாலன்:**—(தனக்குள்) நானென்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்ததே. கடைசியில் இவனுடைய வார்த்தைகளிலேயே காலம் ஆய்விடும்போ லிருக்கிறதே இனி நான் நேசிக்கயிருக்கும் சாந்தாவை யடையமுடியா மற்போமானல் என் உயிர் உடலை விட்டகலுமே! யாது செய்வது? எழுந்து போகலாமென்ருலோ இந்தப் பாவி பாதிவரையில் க்ஷவரம் செய்திருக்கிருன். இவன் இப்படியே விட்டுவிடுவானுகில் சங்கடமாய் முடியும். ஆகையால் இவன் வாய் ஓயும் வரையில் இவன் சொல்லும் சங்கதிகளைக் கேட்டுக்கொண்டுதா னிருக்கவேண்டும்.

[இதைவாசிக்கும் நண்பர்கள் அறியத்தக்கதொன்றுளது. அதாவது சாந்தா என்னும்பெண்மணி உண்மையாக தனபாலனிடம் இச்சை வைத்தவளல்ல. இவனுடைய உயிரைக் காப்பாற்ற எண்ணி இவனைத் தன்னிடம் வரும்படிக்குக் குப்பம்மாளிடம் சொல்லியனுப்பினளே யொழிய, இவன் தன்னிடம் வந்தபிறகு இவனுக்குப் புத்திமதிகள் போதித்து, அவனுடைய எண்ணத்தைமாற்ற விருப்பதைப் பின்னல் அறியலாம்.]

**வா. வம்பன்:**—ஐயா! தகல்பாஜிதங்கவேலுயாதொரு தொழிலிலும் பிரவேசிக்காமல் மிகவும் சோம்பலையடைந்து ஜீவனத்திற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில் நான் அவனை ஓர் வியாபாரத்தில் அமர்த்தத் தூண்டி ஒரு கனவானிடம் 100-ரூபாய் கடன்வாங்கச்செய்தேன். அந்த

ரூபாயைக்கொண்டு நெய்வாங்கிச் சில குடுவைகளில் நிரப்பி ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி, இதற்கென குடிக்கூலிக்கு அமர்த்திக் கொண்ட ஒரு கடையில் வைத்து வியாபாரம் செய்ய அவனை ஒரு கல்லாப்பெட்டியின்மேல் உட்கார வைத்தேன். நானும் அவனுக்குச் சற்றுத் தூரத்தில் உட்கார்ந்துகொண் டிருக்கையில் அவன் என்னை நோக்கிச் சொன்னதாவது, "தம்பி! இந்த 100-ரூபாய் நெய்யைச் சில்லரைக்கு விற்பனைசெய்தால் 200-ரூபாய் கிடைக்கும். அதற்கு மறுபடியும் நெய் வாங்கி வியாபாரஞ்செய்தால் 400-ரூபாய் கிடைக்கும். அதுவரையில் மிகவும் கஷ்டப் பட்டு வியாபாரம் செய்யவேண்டும். பிறகு இந்த 400-ரூபாயையும் விருத்தி செய்வது கஷ்டமல்ல. எப்படி என்றால், நெய் வியாபாரத்தை நிறுத்திவிட்டு நகைகள் வியாபாரம் செய்வேன். அதில் அதிக இலாபம் கிடைத்து விடும். எனக்குத் தேவையான வீடுகள், தோட்டங்கள், முதலிய பூஸ்திதிகளும், கோச்சு, பீடன் முதலிய வண்டி களும் அதற்குத் தேவையான நல்ல குதிரைகளும் வாங்கி அதிக கீர்த்தியுடன் வாழத்தொடங்குவேன். திரவியம் சம்பாதிப்பதை அத்துடன் நிறுத்தாமல் வியாபாரத்தை அதிகப்படுத்திக் கொண்டேவந்து கடவுள்கிருபையால் ஓர் பெரிய அரசனுக்குச்சமானமான ஐஸ்வரியத்தையடைந்து விடுவேன். "குலம் குப்பையில், பணம் பந்தியில்" என் பதைப்போல அநேக பெரிய மனிதர்கள் என்வீட்டுக்கு வந்துபோக நேரிடும், நானும் அவர்களுடைய வீட்டுக்குப் போவேன். என்னுடைய அந்தஸ்திற்குத் தகுந்தமரியாதை களை யடைவேன்.

"பொன்னொடு மணியுண்டானல் புலையனுக் கிளைஞனென்று
தன்னையும் புகழ்ந்துகொண்டு சாதியின் மணமுஞ்செய்வார்
மன்னரா யிருந்தபேர்கள் வகைக்கெட்டுப் போவாராயின்
பின்னையு மாரோவென்று பேசுவா ரேசுவாரே."

என்பதுபோல், என் செல்வ அதிகரிப்பினுல் ஒரு பெரிய அரசனுடைய குமாரத்தியை விவாகம் செய்துகொள்ள எத்தனப்படுவேன். அஃது எப்படி லபிக்குமென்று கேட்பாயோ? அரசனுக்கு ஒரு கடிதம் எழுதுவேன். அதாவது "உன் குமாரத்தியை நான் விவாகம் செய்துகொள்ளப் பிரியபட் டிருக்கிறேன்" என்பதேயாம். அக்கடித்தை என்னுடைய காரியஸ்தன் மூலமாகக் கொடுத்து ஒரு லட்சம் பவுன்களையும் அனுப்புவேன். இப்பரிசையும், கடிதத்தையும் பார்த்தவுடனே அவ்வரசன் சம்மதிக்காம லிருக்கமாட்டான். விவாகம் நடந்தபிறகு என் மனைவியை மிகவும் சொகுசான ஒரு அரண்மனையில் வைத்து அவளுக்கு வேண்டிய ஸ்திரீ பரிவாரங்களையும் அமைப்பேன். நான் இராஜகுமாரனைப்போல் சர்வாபரணாலங்காரங்களுடன் ஒரு பெரிய குதிரையின்மேல் என்னுடைய வேலையாட்கள் சூழ்ந்துவர அரசனுடைய அரண்மனைக்குச் செல்லுவேன். அப்போது அரசன் தன் மந்திரிகள் புடைசூழ என் எதிராகவந்து எனக்குக் கைலாகு கொடுத்து உப்பரிகைக்கு அழைத்துச்சென்று ஒரு உன்னத ஆசனத்தி லமர்த்துவான். எனது பெருமையைப் பார்த்து அங்குள்ளார் யாவரும் அதிக சந்தோஷப் படுவார்கள். அரசனுகிய என் மாமனர் எனக்குக் கொடுக்கும் விலையுயர்ந்த வெகுமதிகளை நான் லட்சியம் பண்ணுமலிருப்பேன். பிறகு என் வீட்டிற்கு வந்த பிறகு, என் மனைவி தனது தந்தையாகிய அரசனுடைய தரிசனத்திற்கு நான் போய் வந்ததற்காக எனக்கு நமஸ்காரம் சொல்லும்படி தனது சேடியர்களை யனுப்புவாள். அவளுக்குப் பாவாடை முதலிய விலையுயர்ந்த ஆடைகளை வெகுமானஞ்செய்வேன். என் மனைவி எனக்கேதாகிலும் வெகுமான மனுப்புவாளாகில் அதை நான் அங்கீகரியாது திருப்பி விடுவேன்.

நான் அவளுடைய அந்தப்புரத்திற்குப் போகும்போ தெல்லாம் அவள் என்னை அதிக மரியாதையாக நடத்தச் செய்வேன். சுருங்கச் சொல்லுகிறேன் கேட்பாயாக. நான் மிகவும் அலங்காரஞ் செய்துகொண்டு இரவில் என் மனைவியிடம் போகும்போது மிகவும் பிகுவாகவே யிருப் பேன். நான் அவளிடத்தில் அதிகமாய்ப் பேசாமல் பிகு வாக யிருந்து கொஞ்சமாகப் பேசுவேன். அப்போது என் மனைவி அதிக அலங்காரத்துடன் புன்னகையோடு என்னெதிரில் வந்து நிற்பாள். நான் அவளைப் பாராதவ னைப்போல் இருப்பேன். அவளுடன் இருக்கும் பாங்கி கள் என்னை மிகவும் ஸ்தோத்திரம் செய்து என் மனையாளை அங்கீகரித்துக்கொள்ளும்படி வேண்டுவார்கள். அதற்கும் நான் மௌனமாகவே யிருப்பேன். அப்பாங்கிகள் மறு படியும் என் மனைவியைச் சற்று அப்புரம் அழைத்துக் கொண்டுபோய் இன்னும் அதிகமாகச் சிங்காரித்து என் னெதிரில் அழைத்துக்கொண்டு வருவார்கள். அப்போ தும் நான் ஏரெடுத்துப்பாராமல் இருப்பேன். மறுபடியும் என்னை அந்தப் பாங்கிகள் வேண்டிக்கொண்டு என் மனை வியை அங்கீகரித்துக் கொள்ளும்படிச் சொல்லுவார்கள். நான் பிகுவாகவே அந்தப்பாங்கிகளை அப்புரம் போகச் செய்து சயனத்தின் பேரில் படுத்துக்கொள்வேன். என் மனைவியும் என் பக்கமாகச் சயனித்துக்கொள்ளுவாள். நான் அவள் பக்கம் திரும்பிப் படுக்காமலும் அவளுடன் பேசாமலும் இருப்பேன். மறுநாள் நான் பேசாமலும் அவளுடன் இன்பம் அனுபவியாமலும் இருந்த சங்கதியை என் மனைவி தன் தாயாராகிய அரசியிடம் சொல்லுவாள். அரசியாகிய என் மாமியார் என்னிடம் வந்து "ஓ என் அருமையான மருமகனே! என் மகள் உம்மைச் சந்தோ ஷப்படுத்துவதே தன்முக்கிய கடமையாக நினைத்திருக்கத்

தாங்கள் அவளிடத்தில் பராமுகமா யிருக்கலாமா?'' என்பாள். நான் பதில் சொல்லாமல் மௌனமாகவே யிருப்பேன். என் மாமியார் என் காலில் விழுந்து எப்படியாகிலும் தன் குமாரத்தியை அங்கீகரித்து அவளைச் சந்தோஷப்படுத்த வேண்டுமென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுவாள். அதற்கும் நான் பதில் ஒன்றும் சொல்லாமல் முடுக்காகவே யிருப்பேன். பிறகு தன் குமாரத்தியை ஒரு கிண்ணத்தில் பசும்பாலுடன் என்னிடத்திற்கு அனுப்புவாள். அவள் என்னிடம் வந்து "எனது பிராண நாதா'' தாங்கள் என் விஷயத்தில் பராமுகமா யிருந்தால் எப்படி நான் உயிர்த்திருப்பேன். தங்களை விட விரும்பத்தக்க செல்வம் வேறென்ன எனக்கிருக்கிறது? தவிர,

"மாதரைப் புகழா மாந்தர் மண்ணிடை யெவரு மில்லை
மாதரை இகழா மாந்தர் மண்ணிடையெவரு மில்லை
மாதரையின்றி வாழ்வு மனையிடை யெவர்க்கு மில்லை
மாதரையின்றித் தாழ்வு வரத்திடைத்தானு மில்லை.''

என்றபடி தாங்கள் என்னை இகழாது ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று பலவிதங்களாக அதிக நயமாகப்பேசி, கிண்ணத்தில் கொண்டுவந்த பாலை அருந்தும்படி என் தாயினிடத்தில் வைப்பாள். அப்போது நான் அதிக கோபத்துடன் கடுகடுத்துப் பேசி அவள் சோபாவின்மேலிருந்து கீழே விழும்படி பலமாக இப்படி ஒரு உதைக் கொடுப்பே னென்று உண்மையாகவே தன் மனைவி எதிரிலிருப்பதாகப் பாவித்து உதைத்தான். ஐயோ! பாவம்! அவன் விற்பனைக்காக அடுக்கி வைத்திருந்த நெய்க்குடுவைகளின்மேல் அந்த உதைப்பட்டு, அக்குடுவைகள் யாவும் ஒன்றின்மே லொன்றாய் விழுந்து உடைந்து அவைகளிலிருந்த நெய் முழுமையும் புழுதியில் சுவரிப்போய் விட்டது. இதை அவன் கொஞ்சமாகிலும் கவனிக்காமல்

உண்மையாகவே தன் மனைவியை உதைத்தவனைப்போல அதிக கோபக்குறியுடன் உட்கார்ந் திருந்தான். நான் அவனைப் பார்த்து, என்ன ஐயா? நீ மிகவும் துன்மார்க்கனு யிருக்கின்றாயே; புதுக்கலியாணப் பெண்ணென்றும் கொஞ்சமாகிலும் நினைக்காமல் குற்றமில்லாத உன் மனைவியை இப்படியும் உதைக்கலாமா? தவிர அரசன் மகள் என்றுகூட நீ மதிக்காமல் போய்விட்டாயே. அவள் கண்ணீரொழுகக் கலங்கி அழுவது உனக்குச் சம்மதமா? நீ மிகவும் கொடூர சிந்தையுள்ளவனென்று எனக்கு இப்போதுதான் விளங்கிற்று என்றேன். அதற்கு அவன் "போடா பயித்தியக்காரா! அரசன் மகளாயிருந்தால் எனக்காவதென்ன? அந்த அரசன் செல்வத்தைவிட என்னுடைய செல்வம் குறைந்திருக்கிறதென்று எண்ணுகின்றனையோ? இவள் போனால் இன்னும் அநேக அரசர்கள் என்னுடைய ஐஸ்வரியத்தைப் பார்த்துப் பெண்ணைக் கொடுக்கச் சித்தமா யிருக்கிறார்கள்" என்றான். நெய் கவிழ்ந்துபோன விசனத்தையும் நோக்காது எனக்கு சிரிப்பு அடக்கமுடியாமற் போய் அவனுடைய தலையை நெய் கவிழ்ந்துபோன இடமாகத் திருப்பி, "இது என்ன பார்த்தாயா" வென்றேன். அதைப் பார்த்தவுடனே அவனுக்குத் தெளிவு வந்து, ஐயோ! என் அகங்காரத்தினால் கெட்டேனே என்று,

"தேம்பி யழுதுத் தேகம் நடுங்க
ஆம்பற் கண்களில் அருவி நீர் பாய
உருண்டு வெளிவரு முதடுகள் துடிக்க
கருத்த மேனியின் கருமுகம் சிவக்க
பெண்ணிவ னென்னப் பெருமூச் செறிந்து
மண்ணிற் பிறந்த மடைய னிவனென
காலை நீட்டிக் கைகளை மோதி
மூலையிற் படுத்து முக்காடிட்டு

வாயது குளரி வயிற்றைப் பிசைந்து
போயது வராதெனப் புலம்பி நின்றுனே."

தனபாலன்:—தகல்பாஜி தங்கவேலின் கதையை முடித்து விட்டாயே. இனியாகிலும் என்னுடைய க்ஷவரத்தைப் பூர்த்திசெய். இனி என்னல் தாமதிக்க முடியாது.

வா. வம்பன்:—(கத்தியைத் தீட்டி மறுபடியும் கீழே வைத்து விட்டு, கடையின் கீழே இரங்கி, பொழுதைப் பார்த்து) ஐயா! இன்னும் உமக்கு அரைமணி சாவகாசமிருக்கின்றது. ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்? மற்ருெரு தமையனுன தருதலை மாணிக்கம் என்பவனுடைய கதையைக் கேட்காமல் போனீரே, இதோ இரண்டொரு வார்த்தையில் முடித்துவிடுகிறேன்.

தனபாலன்:—(தனக்குள்) ஏது இவன் நம்மை விட்டபாடில்லை. மற்ருெரு தமையனுடைய கதையைச் சொல்லித்தான் தீருவான். (பஹிரங்கமாய்) தருதலை மாணிக்கத்தின் கதையை சீக்கிரம் முடித்து என்னை விரைவில் அனுப்ப வேண்டும்.

வா. வம்பன்:—என்னை வாயாடி என்று நீங்கள் நினைத்தீரல்லவா? இதோ இரண்டொரு வசனத்தில் என் தமையனுன தருதலை மாணிக்கத்தின் கதையைச் சொல்லி முடித்து விடுகிறேன்.

---

## அத்தியாயம் 8

### தருதலை மாணிக்கத்தின் சரித்திரம்.

எனது தகப்பனுர் வைத்துப்போன திரவியத்தை என் தமையன்மார்களும் நானும் பங்கிட்டுக்கொண்டபின், தருதலை மாணிக்கம் தனக்கு வந்த பாகத்தைக் கொண்டு தூரதேசம்போய் வியாபாரஞ்செய்யக் கருதி, அவனுக்குப் பிராண நண்பனுகிய வேலு என்பவனுடன் ஆலோசித்

தான். வேலு என் தமையனை நோக்கி, "நண்பா! நீ கொண்டிருக்கும் நோக்கம் நன்றேயாயினும் யாத்திரை செய்கையில் கள்ளர் அச்சம் காடு கொள்ளாதிருக்கும். உன் கையிலிருக்கும் திரவியத்தை அன்னோர் கொள்ளை கொண்டால் பிறகு நீ என்ன செய்வாய்? ஆகவே உன் பிரயாணத்தைப்பற்றி ஆலோசிக்கவேண்டியதா யிருக்கின்றது. நாளையதினம் காலையில் உன்னிடம் வருகிறேன்", என்று சொல்லிப்போய் மறுநாள் தன் தமையனிடம் வந்து, "நண்பா! நீ யாத்திரை செய்யும்போது ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் உமதிஷ்டம்போல் சுற்றிவர ஒரு யுக்தி செய்திருக்கிறேன்" என்று சொல்லி தருதலை மாணிக்கத்தை இரண்டு தேக்கம்பலகைகளைக் கிரயத்திற்கு வாங்கிவரச்செய்து, ஒரு தச்சனையும் வரவழைத்தான்.

வேலன் அப்பலகைகளினால் தச்சன் உதவியைக் கொண்டு ஒரு ஆகாய விமானம் தயார் செய்து, அந்த யந்திரத்திற்கு சுள்ளாணி, வில் முதலான நுட்ப வேலைகளையெல்லாம்செய்து தச்சனுக்குக் கூலிகொடுத்தனுப்பியபின் மறுநாள் அந்த யந்திரத்தை எடுத்துக்கொண்டு தருதலை மாணிக்கத்தையும் அழைத்துக்கொண்டு ஓர் கிராமத்திற்குப்போய் அந்த யந்திரத்தை நடத்தும் இரகசியம் யாரும் அறியாவண்ணம் அதில் தான் உட்கார்ந்துகொண்டான். அந்த விமானம் ஆகாய மார்க்கமாய்ப் பறந்து ஒரு வினாடிக்குள் கண்களுக்கெட்டாத் தூரம் சென்று மறுபடியும் தருதலை மாணிக்கத்தின் சமீபத்தில் வந்து இறங்கினான். இந்த ஆச்சரியத்தைப் பார்த்தவுடன் என் தமையனுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை. வேலன் தருதலை மாணிக்கத்தை நோக்கி, "மித்திரா! நீ இந்த சூஸ்திரவிதியைப் பார்த்தாயா? நீ எவ்வளவுதூரம் பிரயாணம் செய்ய வேண்டுமென்றாலும் அவ்வளவு தூரம் இந்த வில்லாணி

யின் விசையைக்கொண்டே வழியில் கள்வர்கள் கைக்குத் தப்பிப்போகலாம். இனி நீ உன் பயத்தை யொழித்து நான் உனக்கு இனுமாய்த்தரும் இந்த விமானத்தின் உதவியால் எல்லாப் பிரதேசங்களையும் பார்க்கலாம். இந்த விமானத்தின் சூஸ்திர ஆணியைக்கொண்டே ஆகாய மார்க்கமாய்ப் பறக்கவும், இறங்கவும், நினைத்தவிடத்தில் நிறுத்தவும் உபயோகமாகும்படி நல்ல சாஸ்திரயுக்தி முறையில் செய்யப்பட்டது. நான் யந்திரங்கள் செய்யும் வேலைகளில் சாஸ்திர சம்பந்தமான சிற்ப நூலில் தேர்ந்த நிபுணனுகையால் இதைச் செய்து முடித்தேன்'' என்று சொல்லி அந்த விமானத்தை நடத்தவும், நிறுத்தவும், திருப்பவும், நன்ருகக் கற்றுக்கொடுத்தான். இந்த யந்திரத்தைத் தன் தோட்டத்தில் ஒரு பந்தோபஸ்தான இடத்தில் யாருக்கும் தெரியாமல் வைத்துவிட்டு வேலு என்பவனுக்குத் தகுந்த பரிசளித்து, ஆனவரையிலும் கடன் வாங்கித் தன் சிநேகிதர் முதலானவர்களுக்கு விருந்துசெய்யக் கொண்டமட்டும் செலவு செய்தான். சில நாட்களுக்கெல்லாம் கடன்காரர்களுடைய நிர்ப்பந்தம் அதிகமாகவே,

"விடன்கொண்ட மீனைப்போலும் வெந்தழல் மெழுகுபோலும்
படங்கொண்ட பாந்தள்வாயிற் பற்றிய தேரைபோலும்
திடங்கொண்ட ராமபாணம் செருக்களத் துற்றபோது [தன்''
கடன்கொண்டார் நெஞ்சம்போலக் கலங்கினுன் இலங்கைவேந்

என்றபடி அதிக திகிலடைந்து ஊரைவிட்டு ஓடிப்போவதைத் தவிர வேறு உபாயம் இராததைக்கண்டு ஆகாய விமானத்திலேறிக்கொண்டு சுள்ளாணியைத் திருப்பி ஆகாயத்தில் பறக்கவிட்டான். ஒரு நிமிஷத்திற்குள்ளாக ஊரைவிட்டு அதிக வேகமாய் விமானத்தை நடத்திக்கொண்டு காடு, மலை, வனந்தரம் முதலியவற்றைக் கடந்து மறுநாள் ஒரு சோலையைச்சார்ந்த பெரிய பட்டினமொன்

றைக் கண்டான். தன் விமானத்தை அங்கோர் மறை வான இடத்தில் இறக்கிப் பத்திரப்படுத்திவிட்டு அங்கோர் மனிதனிருக்கக் கண்டு அவனிடம் சென்று அவ்வூரின் வளப்பத்தை விசாரித்தான். அம்மனிதன் தருதலை மாணிக் கத்தை நோக்கி, "அப்பா! நீ யாரோ அன்னியனாகக் காணப்படுகிறாய். இப்பட்டினத்தின் பெயர் மச்சபுரி. இதையாளும் அரசன் பெயர் மதிகேடன். இவனுக்கு இந்துமதி என ஓர் புத்திரியுண்டு. அவள் ஒரு சாதாரண மனிதனால் கற்பழிக்கப்படுவாளென்று அவள் ஜாதகத்தில் குறிப்பிட்டிருந்தமையால் எப்போதும் அழியாத விதமாய் பலமான கருங்கல்லால் ஓர் கோட்டையமைத்து, அதைச் சுற்றிலும் ஆழமான அகழியைத் தோண்டி, நீரினால் பெரு கிக் கொண்டிருக்கச்செய்து, அதில் தன் குமாரத்தியை வைத்து ஒருவரும் அதில் பிரவேசியாமலிருக்க, தேர்ந்த வீரர்களைக்காவல் வைத்திருக்கின்றான்" என்றான். தருதலை மாணிக்கம் இதைக் கேட்டபிறகு அப்பட்டினத்தைப் பார்க்கச் சென்றான். அப்பட்டினத்திற்கு நேரே அவன் புறப்பட்டுப் போகையில் அதிக ஜன இரைச்சலுண்டாகிற தைக் கேட்டுத் திகைத்து யாதென்று பார்க்கையில் அநேக இராணுவவீரர்கள் குதிரையின்மேல் வருவதையும், அவர் கள் மத்தியில் விநோத உடைகளுடன் மன்னனொருவன் வருவதையுங் கண்டான். இவனே இந்துமதியின் தகப்ப னான மதிகேடனா யிருக்கவேண்டுமென்று நினைத்துக் கொண்டு தான் விமானத்தைப் பத்திரப்படுத்தியிருந்த சோலையினிடஞ்சென்று, தான் வைத்திருந்த ஆகாரத்தில் கொஞ்சம் புசித்து இளைப்பாறியிருந்தான். இரவானதும் இந்துமதி என்னும் பெண்ணினுடைய கடுங்காவலைப்பற்றி நெடுநேரம் யோசித்துக்கொண்டு அவளைப் பார்க்கவேண்டு மென்கிற எண்ணம் அதிகமாகி காமவேதனைக் குட்பட்டு,

"காமமே குலத்தினையும் நலத்தினையுங்
 கெடுக்கவந்தக் களங்கம் அன்றி
காமமே தரித்திரங்க ளனைத்தினையும்
 புகட்டிவைக்குங் கடாரம் மற்றும்
காமமே பரகதிக்குச் செல்லாமல்
 வழியடைக்கும் கபாடம் இன்னும்
காமமே யனைவரையும் பகையாக்கிச்
 கழுத்தரியுங் கத்தி கண்பாய்."

என்றபடி, தனக்குவரும் ஆபத்தையும் கவனிக்காமல் அஞ்சாத துணிச்சல்கொண்டு, தன்மேனி முழுவதும் விபூதியையணிந்துகொண்டு விமானத்தில் ஏறி, சூஸ்திரத்தை முடுக்கி ஆகாயமார்க்கமாய்க் கிளம்பி, அகழியைச்சுற்றிலும் காவல் புரியும் வீரர்களுக்குத் தெரியாமல் அரண்மனையின் மேல் மாடியில் விமானத்தை நிறுத்தி அங்குமிங்கும் பார்க்க ஓர் ஜன்னல் திறந்திருக்கக் கண்டான். மிகவும் விசித்திரமாய் அலங்கரித்திருக்கும் கட்டிலின்மேல் இந்துமதி என்பவள் தூங்குவதைக்கண்டு, அந்த ஜன்னலின் வழியாக அவள் சமீபத்திற் சென்றான். அவளழகைக் கண்டு மதிமயங்கி தான் இன்னது செய்கிறேனென்றும் அவனுக்குத் தெரியாமல் அவள் கன்னத்தில் முத்தமிட்டான். இந்துமதி உடனே விழித்துக்கொண்டு பெருங்கூச்சலிட்டுச் சமீப அறையிலிருந்த தாதிகளைக் கூவி அழைத்து, "இந்த அன்னியன் இங்கு எவ்விதம் வந்தான்? கோட்டையைச்சுற்றிலும் காவல் புரியும் வீரர்களைத் தப்பி, இரும்பினாலமைத்துப் பூட்டியிருக்கும் கதவுகளையுங் கடந்து வந்தது மல்லாமல் என் கன்னத்திலும் முத்தமிட்டு என் கற்பை யழிக்க வந்தான்" என்றாள்.

என் தமையனான தருதலை மாணிக்கம் இவ்வாபத்தினின்றும் தப்பித்துக்கொள்ள ஓர் உபாயஞ் செய்தான். அது யாதெனில், அவன் இந்துமதியை நோக்கி, "ஏ

சவுந்தரவதியே! நான் அகஸ்மாத்தாக இவ்விடம் பிரத்தியட்சமானதற்காக நீயும் உன் தோழிகளும் அதிசயிக்க வேண்டிய அவசியமில்லே. மாதின் மயக்கத்தால் மையல் கொண்டு அலேயும் காமுகர்களி லொருவனுக என்னே எண்ணவேண்டாம். உன் கற்பை யழித்துப்போக நான் வரவில்லே. நான் சுப்பிரமணியக்கடவுள். சோதிடர்கள் கூறியமொழியைக் கேட்டு உன்பிதா உன்னே அருஞ்சிறைப் படுத்தினமையால் உன் பக்திக்கு யான் கருணேகூர்ந்து அந்த ஜோசியம் தவறென்பதை யுனக்குத் தெரிவிக்க இங்குவந்தேன். இதுமுதல் எனக்கிருக்கும் வள்ளி, தெய்வானே என்னும் இரு மனேவிகளுடன் நீயும் ஒரு மனேவியாக இருக்கக்கடவாய். என்னே மருமகனுக அடையும் பெருமை உன் தகப்பனுர் அடையக்கடவர்.'' என்று சொன்னுன். இதைக்கேட்ட இந்துமதியும், தோழியும், "நுண்ணறிவுடையோர் நூலோடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும் பேதமையே'' என்றபடி அவன் சொன்னதை மெய்யாகக் கொண்டனர். அன்றிராப் பொழுது இந்துமதியுடன் தருதலே மாணிக்கம் சுகித்திருந்து பொழுது விடிவதற்குள் தன் விமானத்தி லேறிக் கொண்டு காவலர்களின் கண்களுக்குப் புலப்படாத தூரத்தில் கிளம்பி, தோப்புக்குட்சென்று விமானத்தை அங்குப் பத்திரப்படுத்திப் பட்டினத்தின் கடைவீதிக்குச் சென்று தன் கையிலிருந்த திரவியத்திற்கெல்லாம் நல்ல ஆடைகளும் வாசனேத் திரவியங்களும் வாங்கித் தன்னே மிகவும் அலங்காரம் செய்துகொண்டு அன்று இரவு வந்தவுடன் தன் விமானத்திலேறிக்கொண்டு பழையபடியே இந்துமதியிடஞ் சென்ருன். இரவு அவளுடன் சுகித்துப்பழையபடிபொழுது புலர்வதற்குள் தன் விமானத்திலேறி, தோப்பண்டைவந்து தன்னிடத்திலிருந்த பலகாரத்தைச் சாப்பிட்டு இருந்தான்.

பிரதிதினமும் இவ்வாறு இந்துமதியிடம் போவதும் வருவதுமா யிருக்கையில் இந்துமதியும் நாளுக்குநாள் அவனைச் சாட்சாத் சுப்பிரமணியக் கடவுள்தா னென்று மதித்து அதிக விசுவாச பயபக்தியுட னிருந்தாள். அவள் தந்தையாகிய மதிகேடன் என்னும் அரசன் ஓர் நாள் தனது மந்திரிப் பிரதானிகளுடன் தன் குமாரத்தியைப் பார்க்க அக்கோட்டையினிடம் வந்தான். கதவுகளெல் லாம் பூட்டினபடியே சீல் செய்திருக்கக்கண்டு தன் குமா ரத்தி சோரம் போவாளென்று ஜோதிடர்கள் சொன்னது தப்பாகவே முடியுமென்று திடங்கொண்டு, தன்னுடன் வந்தவர்களை கோட்டைக்கு வெளியிலிருக்கச்செய்து தான் தனியாகத் தன் குமாரத்தியிடஞ் சென்றான். இராஜ குமாரத்தி தன் தந்தையைப்பார்த்தவுடன் அதிக திகி லடைந்தனள். அரசன் தன் குமாரத்தியைப் பார்த்து "குழந்தாய்! நீ என்னைப் பார்த்தவுடன் மனங்கலங்குவா னேன்? ஏதாகிலும் நூதன காரியங்கள் நடந்ததோ?" என்றான். இந்துமதி நடந்த விருத்தாந்தத்தைத் தெரி வித்தனள். அரசன் அதிக ஆச்சரியப்பட்டு "குழந்தாய்! நீ என்ன மதியற்றவளா யிருக்கிறாய். சாட்சாத் சுப்பிர மணியக்கடவுள் எனக்கு மருமகனாகப் போகிறாரென்றால் உலகம் சிரிக்காதோ? வெளியில் சொன்னால் வெட்கக் கேடாய் முடியும். பேதமை என்பது மாதர்க்கணிகலம் என்பதுபோல் அக்கசடன் வார்த்தையை நம்பி மோசம் போனாயல்லவா? சோதிடர் சொன்னது உண்மையா யிற்றே. இந்த அவமானத்தி னின்றும் நான் எப்படித் தப்புவேன்" என்று அதிக கோபத்துடன் அரண்மனை முழுதிலும் அந்த மோசக்காரனைத் தேடினான். எங்கும் காணாமையால் தன் மந்திரிப் பிரதானிகளை உள்ளே யழைத்து அவர்களுடன் நடந்த விபரீதத்தை மொழிந்

தான். அம்மந்திரிகளில் ஒருவன் தவிர மற்றவர்களெல்லாம், கதவுகளெல்லாம் பூட்டி சீல் செய்திருக்க உள்ளே வருபவன் மனிதனுக இருக்கமாட்டான், கடவுளாகவே யிருக்கவேண்டுமென்றனர். ஒரு மந்திரி மாத்திரம் அவர்களுக்கு மாருகப் பதில் சொன்ஞன். இக்கடைசி மந்திரியைத்தவிர மற்றவர்களை அவரவர்களிருப்பிடத்திற்கனுப்பிவிட்டுத் தன் மகளிடம் வரும் அக்கபடனைக் கண்டுபிடிக்க சர்வ பிரயத்தினத்துடன் அங்குத்தானே யிருந்தான். இரவு வந்ததும் தன் மகளிருக்கும் அறையில் அக்கபடன் வரும் வழியை எதிர்பார்த்த வண்ணம் உருவின கத்தியுடன் வீற்றிருந்தான். ஆனல் அன்றிரவு மின்னலும், இடியும் உண்டாகி அதிக முழக்கமா யிருந்தது. ஜன்னல் வழியைப் பார்த்த வண்ணமா யிருந்த அரசனுக்குக் கண் தெரித்துப் போகும்படியான மின்னல் உண்டாகி ஆகாயமெல்லாம் ஒரே வெளிச்சமா யிருந்தது. அரசன் சித்தங்கலங்கி அந்த சாட்சாத் சுப்பிரமணியக் கடவுள் இங்கு எழுந்தருளப் போவதை முன்னதாக அறிவிக்க இந்த மின்னலும், முழக்கமும் உண்டாவதாகத் தோன்றுகிறது என்று எண்ணினன். தருதலை மாணிக்கம் வழக்கப்பிரகாரம் ஜன்னல் வழியாக உள் நுழைந்தான். அரசன் அவனை வெட்டித் துணித்தெரிவதற்குப் பதிலாய் அவனைக் கண்டவுடன் மிகவும் திகிலடைந்து அவன் பாதத்தில் விழுந்து, சுவாமி! நான் அற்ப மனிதன், தேவரீர் எனக்கு மருமகனுகும் பாக்கியத்திற்கு நான் பாத்திரனல்லவே'' என்றதும், தருதலை மாணிக்கம் அரசனைப்பார்த்து, மன்னவனே! நீ மிகவும் தெய்வபக்தியுள்ளவ ஞகையால் உன் குமாரத்தியின் விஷயத்தில் நீ கொண்டிருக்கும் சங்கோஜத்தை நிவர்த்திசெய்து அவளுடைய கற்பைக் காப்பாற்ற நான் இங்குவந்தேன்?'' என்ருன். இதைக் கேட்டதும் அரசன் மறுபடியும் அவன்

பாதத்தை வணங்கி, தன் குமாரத்தியும், சுப்பிரமணியக் கடவுளும் தங்களிஷ்டப்படியிருக்க தன்னால் இடைஞ்சலாயிருக்குமென்று வேறோர் அறைக்குட்சென்று சயனித்துக் கொண்டான். தருதலை மாணிக்கம் அன்றிரவெல்லாம் இந்துமதியுடன் கூடிக்குலாவி பொழுது விடியும் சமயத்தில் எழுந்து தன் விமானத்திலேறித் தோப்புக்குச்சென்றான். காலையில் அரச சமஸ்தானத்தைச் சேர்ந்த மந்திரிப் பிரதானிகளெல்லாம் இராஜ குமாரத்தியின் கோட்டைக்கு வந்து அரசனைக் கண்டு சங்கதியை விசாரித்தார்கள். அரசன் அவர்களை நோக்கி, என் குமாரத்தியினிடம் வருபவர் சுப்பிரமணியக்கடவுளே தவிர வேறு யாருமல்ல. நான் நேரில் பார்த்து வார்த்தையாடினேன். அவரே என் குமாரத்தியின் கற்புகெடாவண்ணம் மணரவந்திருக்கிறார் என்றான். மந்திரிப் பிரதானிகள் எல்லாரும் மிகவும் சந்தோஷமடைந்து அரசனை நோக்கி "அரசே! இனிக் காலதாமதஞ் செய்யாமல் தங்கள் குமாரத்தியைச் சுப்பிரமணியக்கடவுள் பாணிக்கிரகணம் செய்துகொண்டாரென்று விளம்பரப் படுத்தலாம்" என்றார்கள். கடைசி மந்திரி மாத்திரம் அதற்கு உடன்படவில்லை. இராஜ குமாரத்தியிடம் வருபவன் மானிடனென்றே வாதித்தான். அரசனும் மந்திரி முதலானவர்களும் அரண்மனைக்குச்செல்லப் புறப்பட்டார்கள். அகஸ்மாத்தாக மின்னலும், இடியும், பெருங்காற்றும் உண்டாகி கடைசி மந்திரி குதிரையின்மேலிருந்து தவரிக் கீழே விழுந்து கைமுறிந்து பலத்த காயம்பட்டது. அரசன் அவனை நோக்கி, நீ சுப்பிரமணியக்கடவுளை நம்பாமல் மனிதனென்று சாதித்தமையால் அவர் உன்னை இவ்வாறு தண்டித்தாரென்றுசொல்லி எல்லாரும் அரண்மனைச் சேர்ந்தார்கள். மறுநாள் அரசன் தன் குமாரத்தியை சுப்பிரமணியக்கடவுள் பாணிக்கிரக

ணம் செய்துகொண்டாரென்று பட்டினம் முழுதும் விளம்பரப்படுத்தினன். தருதலை மாணிக்கம் பட்டினம் சென்றிருந்தமையால் கடைசி மந்திரிக்கு நேர்ந்த ஆபத்தையும், விவாக விளம்பரத்தையும் தெரிந்துகொண்டு அன்றிரவு இந்துமதியிடம் வந்து, "பெண்ணே! நான் கடவுளல்லவென்று சாதித்த மந்திரிக்குத் தகுந்த தண்டனைச் செய்து, பெருங்காற்றையும், மின்னலையும், இடியையும் உண்டாக்கி அவன் குதிரையினின்றும் கீழே விழும்படிச்செய்தேன். இனி யாராவது என்னைக் குறை கூறுவார்களானுல் கொஞ்சமேனும் இரக்கம் வைக்காமல் எமனுலகத்திற்கு அனுப்புவேன்" என்று சொல்லி அவளிடம் சுகித்திருந்து வழக்கப்படி தன்னிருப்பிடமாகிய தோப்புக்குச் சென்றான். மதிகேடன் என்னும் அரசன் மறுநாள் கொலுச்சாவடிக்கு மந்திரிப் பிரதானிகளை யழைத்து, "நேற்று என் மருமகனை சுப்பிரமணியக் கடவுளைப்பற்றிக் கடைசி மந்திரி இழிவாகப் பேசினமையால் கைமுறிந்து பலத்த காயம்பட்டது. முன்பொருக்கால்,

"செவ்வேளைப் பாலனென எண்ணித் திரலழிந்தான்
றுவ்வாத வெஞ்சூரன் சோமேசா—வவ்வா
உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேற்
கச்சாணி யன்ன ருடைத்து."

என்றபடி, இவரைப் பாலனெனமதித்து சூரபத்மா உயிரிழந்தான். இப்போது எல்லோரும் அவரிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டு காயம்பட்ட மந்திரி சுகமாகும்படி அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும்" என்று மந்திரி பிரதானிகளை அழைத்துக்கொண்டு குமாரத்தியின் கோட்டைக்குப்போய் கதவுகள் யாவும் சீல் வைத்தபடியே யிருக்கக்கண்டு அதிசயித்து, கதவுகளைத்

திறந்துகொண்டு தன் குமாரத்தியினிடம் சென்று, "அருமை மகளே! உன் பிராணநாதர் விஷயத்தில் சந்தேகம் கொண்ட அமைச்சனை அவர் தண்டித்துக் கஷ்டத்திற்குள்ளாக்கினர். அவர் அதை மன்னித்து அனுக்கிரகிக்க உன் மூலமாய் அவரைப்பிரார்த்திக்க நாங்கள் உன்னிடம் வந்தோம்'' என்றான். இந்துமதி அரசனைப் பார்த்து, "தந்தையே! தாங்கள் தெரிவிக்கும்சங்கதி சென்ற இரவே எனக்குத் தங்கள் மருகர்சொல்லி, இனி எவனுகிலும் அவர் விஷயத்தில் அவநம்பிக்கைக் கொண்டால் அன்னவனை மாண்டுபோகச் செய்வதாகவும் தெரிவித்தனர். நான் அவரை மன்னிப்புக்கேட்டு மந்திரியை சொஸ்தப்படுத்தி வைக்கிறேன்'' என்றாள். பிறகு அரசன் முதலானவர்கள் விடைபெற்று அரண்மனைச் சேர்ந்தனர். தருதலை மாணிக்கம் தன்கையில்வைத்திருந்த பணமும்போய், தின்பண்டங்களும் செல்வழிந்து சுப்பிரமணியக் கடவுளென்று தன்னை மதிப்பித்திருப்பதுபோக ஓர் ஏழையைப்போல் பிச்சையெடுத்து ஜீவனம்செய்யும் ஸ்திதியில் வந்துவிட்டான்.

தனபாலன்:—(வாயாடி வம்பனைப் பார்த்து) ஐயா, க்ஷவரகரே! நான் உன்னை எவ்வளவு வேண்டிக்கொண்டும் நீர் உமது பிரசங்கத்தைமுடித்தபாடில்லையே; நான் போகவேண்டிய மணியும் ஆய்விட்டதே. இப்படியும் நீர் என் முக்கியமான வேலையைக் கெடுக்கலாமா?

வா. வம்பன்:—நீங்கள் போகவேண்டிய அலுவலுக்குச்சரியான டயத்திற்கு உங்களை அனுப்பாம விருப்பேனே? என்விஷயத்தில் நீர் அப்படி நினைக்கவேண்டாம். உமக்கு அவசரவேலை கெட்டால் எனக்கும் கெட்டமாதிரியல்லவா? இன்னும் அரைமணி சாவகாசமிருக்கிறது. இதோ மற்றச் சங்கதியையும் சொல்லி விடுகிறேன் (கத்தியைத் தீட்டிக் கீழேவைத்து.)

தருதலை மாணிக்கம் சாப்பாட்டுக்கே திண்டாட்ட முண்டாகி இந்துமதியை நோக்கி, "ஆ என் காதலியே! உன்னுடன்கூடி விளையாடி இத்தனை நாளாகியும் எனக்குக் கொடுக்கவேண்டிய சீதனங்களெங்கே?" என்றவுடன் "சுவாமி! தங்களுக்கென்ன குறைவு, என் தந்தையின் பொக்கிஷத்திலுள்ள திரவியம் யாவும் தங்களுடையதே" என்று இந்துமதி சொன்னதைக் கேட்ட தருதலை மாணிக்கம் "திரவியம் எனக்குத்தேவையில்லை, நீ அணிந்திருக்கும் மோஹராமாலையை மாத்திரம் எனக்களித்தால் போதும்" என்று சொல்லி அதைப் பெற்றுக்கொண்டு கடைவீதிக்குச்சென்று அதை விற்று, அந்தப் பணத்தைச் செலவு செய்துகொண்டு வந்தான். சிலநாள் சென்றபிறகு சந்திர கிரியரசன் இந்துமதியை மணஞ்செய்துகொள்ள விரும்பித் தூதுவரை மதிகேடனிடம் அனுப்பினான். தூதுவரால் சங்கதியை யுணர்ந்த மதிகேடன் "என் குமாரத்தி மானிடரைமணக்கும் அபகீர்த்தியைப் பெறாமல் சுப்பிரமணியக் கடவுளை மணந்து ஒரு மாதமாகின்றது" என்று மொழிந்ததைக்கேட்ட தூதர்கள் சந்திரகிரி யரசனுக்குத் தெரிவித்தார்கள். அவ்வரசன் கடுஞ்சினங்கொண்டு மதிகேட அரசன்மேல் யுத்தத்திற்குப் படையுடன் வந்தான். மதிகேடன் சத்துருக்களுக்கஞ்சி யாது செய்வதென்று மந்திரிகளுடன் ஆலோசிக்கையில் அவர்கள் அரசனை நோக்கி 'அரசே! சூரர்களை சம்ஹரித்த சாட்சாத் சுப்பிரமணியக் கடவுளே உமக்கு மருமகனாக இருக்கும்போது நீங்கள் அஞ்சவேண்டியதேன். அவரைத் துணையாகக்கொண்டு சத்துருக்களை ஜெயித்து குடிகளைக் காப்பாற்றவேண்டும் என்றனர். உடனே மதிகேடன் இச்சங்கதியைத் தெரிவிக்கத் தன்குமாரத்தியி னரண்மனைக்குச் சென்று அவளை நோக்கி "சந்திரகிரியரசன் என்னுடன் யுத்தம்பண்ண

சைன்னியத்துடன் வந்திருக்கின்றான். நான் அவனுடன் எதிர்த்து சண்டையிட சாமர்த்தியனல்லேன். ஆகையால் சுப்பிரமணியக் கடவுளுடன் இச்சேதியைத் தெரிவித்து பகையாளிகளை அபஜெயப்படுத்தித் துரத்திவிடச் செய்ய வேண்டும்' என்றவுடன் இந்துமதி தந்தையைப் பார்த்து, 'இதற்காகத் தாங்கள் அஞ்சவேண்டுவதில்லை. அவர் நம்மைப்போல மானிடரல்ல. எல்லா சங்கதிகளும் நாம் சொல்லாமலேயே இதுவரையில் யாவையும் அறிந்தே யிருப்பார், ஒருவேளை அவர் நாமறிவிக்காமலேயே சத்துருக்களை யெதிர்த்துத் துரத்தியிருந்தாலும் இருப்பார்' என்று சொல்லித் தனது நாயகனாகிய சுப்பிரமணியக் கடவுளுக்காக எதிர் பார்த்திருந்தனள்.

சந்திரகிரியரசன் படையெடுத்து வந்திருக்கும் சங்கதி பட்டினம் முழுதும் பிரஸ்தாபமாயிருக்கிறதைக் கேள்விப் பட்ட தருதலை மாணிக்கம், சிலகற்களைப் பொறுக்கித் தன் விமானத்தில் வைத்துக்கொண்டு சைந்நியம் இறங்கி யிருக்கும் இடத்தை நாடிச்சென்று அரசன் படுத்துத் தூங்கும் கூடாரத்தைச் சுற்றிலுள்ள சிப்பாய்கள் தூங்குவதைக் கண்டு கூடாரத்தில் நுழைந்து, தூங்கிக்கொண் டிருக்கும் சந்திரகிரி அரசனுடைய தலையின்மேல் ஓர் பெருங்கல்லைப் போட்டு விமானத்திலேறி ஆகாயத்திற் சென்றான். அரசனுக்குப் பலத்தகாயம் பட்டதினால் அவனுடைய கூச்சலைக் கேட்டசிப்பாய்களெல்லாம் அரசனிடம்வந்து, காயம்பட்டு மூர்ச்சையிலிருப்பதைப் பார்த்து, சங்கதி ஒன்றும் உணர மாட்டாமல் திகைத்திருந்தனர். தருதலை மாணிக்கம் ஆகாயத்திலிருந்து கற்களை மளமளவென்று அந்த சிப்பாய்களின்மேல் வீசவே அவர்களெல்லாம் பயந்து சாட்சாத் சுப்பிரமணியக் கடவுளை மருமகனாகப் பெற்றிருக்கும் மதிகேட அரசன்மேல் நாம் யுத்தத்திற்கு வந்தபடியால் அக்

கடவுள் நம்மை யழிக்கக் கல்மழை சொரிகின்றாரென்று நாலாபக்கமும் சிதரி யோட்டம் பிடித்தார்கள்.

சேனைகள் தன் நாட்டைவிட்டு ஓடிவிட்டதை யறிந்த மதிகேடன் தன் மந்திரி பிரதானிகளுடன் பகையாளியின் கூடாரத்தண்டைபோய் பார்க்கையில் அவ்வரசன் பலத்தகாயத்தால் உயிர் மாய்ந்திருப்பதை யறிந்து அவனை அடக்கம் செய்துவிட்டு சுப்பிரமணியக் கடவுள் செய்த அற்புதத்திற்காகப் பலரும் மகிழ்ந்து தன் குமாரத்திக்கு இச்சங்கதி தெரிவிக்க அவளுடைய அரண்மனைக்குச் சென்றான். அங்கு தருதலை மாணிக்கம் வந்தவுடனே அரசன் சாஷ்டாங்கமாக அவனுக்கு நமஸ்காரஞ்செய்து, "சுவாமி' தாங்கள் செய்த உதவி இவ்வளவென்று என்னால் சொல்ல முடியுமோ?" என்றான். தருதலை மாணிக்கம் அரசனை நோக்கி, "நீர் எனக்கு உன் குமாரத்தியைக் கொடுத்த போதே எனக்கு எல்லாவித சொந்தமும் ஏற்பட்டுவிட்டது. உன் பட்டினத்தின்மேல் படையெடுத்துவந்த சந்திரகிரி யரசனைக் கொன்று அவனுடைய படையையும் கல்மழையால் சிதர வடித்தேன். இனி உன் மேல் வரும் பகைவரை அக்கினி மழையால் மாளச்செய்வேன் என்றான். மதிகேடன் மிகு மகிழ்ச்சியுடன் அவனை நமஸ்கரித்துச் சென்றபிறகு இந்துமதி தருதலை மாணிக்கத்திற்குச் செய்த உபசாரங்களும் மரியாதைகளும், இவ்வளவென்று சொல்லவொண்ணாது. தான் அடைந்த ஜெயத்திற்காக ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளை அப்பட்டினத்திலுள்ள ஜனங்களெல்லாம் கொண்டாடவேணுமென்று அரசன் அறிக்கைசெய்தான். அன்று அஸ்தமித்ததும் ஜனங்களெல்லாம் கும்பலாகத் தெருவீதிகளில் நிறைந்து பலவித ஆட்டம் பாட்டங்களில் களிப்புற்றிருக்கையில் தருதலை மாணிக்கமும் ஓர் அற்புதத்தை அந்த ஜனங்களுக்குக் காண்பிக்கக்கருதி கடைத்

தெருவிற்குச்சென்று, கந்தகபாணங்களை வாங்கித் தன்விமானத்தில் வைத்துக்கொண்டு ஆகாயத்தில் அதிதூரத்திலிருந்து சகலரும் கண்டு வியக்கும்படி அப்பாணங்களை ஆகாய முழுவதும் பரவும்படிச் செய்தான். ஜனங்களெல்லாம் ஆச்சரியப்பட்டு அரசனுக்கு மருமகனுகவந்த ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள்தான் எல்லாரும் வியக்கும்படி பூாணவேடிக்கையை ஆகாயத்தில் செய்தனரென்று மிகவும் களித்தனர். பொழுது விடிந்ததும் தருதலை மாணிக்கம் பட்டினத்திற்குப்போய் தின் பண்டங்களை வாங்கிக்கொண்டு விமானத்தை வைத்திருக்கும் தோப்பண்டைப் போகும்போது, அந்த விமானம் எரிந்து சாம்பலாய் விட்டது. இதைக் கண்ணுற்றதும் அவன் பூமியில் குப்புர விழுந்து புரண்டு வாயிலும் வயற்றிலும் அடித்துக்கொண்டு கோவென்று கதரி அழுது,

"இப்பிறவி யென்னுமோ ரிருட்கடலின் மூழ்கிநா
னென்னுமொரு மகர வாய்ப்பட்
டிருவினை யெனுந்திரையி னெட்டுண்டு புற்புத
மெனக் கொங்கை வரிசை காட்டுந்
துப்பிதழ் மடந்தையர் மயற்சண்ட மாருதச்
சுழல் வந்து வந்தடிப்பச்
சோராத வாசையாங் கானு வானதி
சுரந்ததென மேலு மார்ப்பக்
கைப்பரிசு காரர்போ லறிவான வங்கமுங்
கைவிட்டு மதி மயங்கிக்
கள்ளவங்க க்காலர் வருவரென் றஞ்சியே
கண்ணருவி காட்டு மெளியேன்
செப்பரிய முத்தியாங் கரைசேரவுங் கருணை
செய்வையோ சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோம யானந்தமே"

என்று கடவுளைத்தொழுது இந்துமதியையும், மதிகேடனை யும் நட்டாற்றில் விட்டு அப்பட்டினத்திலிருந்து நீங்கித் தன்னிருப்பிடம் சேர்ந்து பழையபடி தன் காலத்தைக் கழித்து வருகின்றான்.

ஆகையால் ஐயா! என்னை வாயாடி என்று நீங்கள் சொல்லுகிறீர்களே. இதுவரையில் நான் தெரிவித்த என் சகோதரர்கள் வாயாடிகளா? நான் வாயாடியா? என் பதை இப்போதாவது நீங்கள் உணர்ந்தீர்களா? .

தனபாலன்:—அப்பா! நீ மிகவும் மிதபாஷிதான். என் வேலையை இனியாகிலும் தாமதமன்னியில் பூர்த்தி செய்யவேண்டியது. மணியும் 11 ஆய்விட்டது.

வா. வம்பன்:—ஐயா! இதுவரையில் தாங்கள் போகும் வேலை இன்னதென்று தெரிவிக்காமலிருக்கிறீரே. சரியாக 12-மணிக்குப் போகவேண்டிய வேலை எது! தயைசெய்து எனக்குத் தெரிவிக்கலாகாதா?

தனபாலன்:—12-மணிக்குச் சரியாக ஒரு விருந்துக் குப் போகவேண்டியது. இராவிட்டால் நான் உன்னை இவ் வளவு துரிதப்படுத்தமாட்டேன்.

வா. வம்பன்:—(கத்தியைக் கீழே வைத்துவிட்டு) ஆ ஹா! மறந்துவிட்டேன் இன்றையதினம் 12-மணிக்குச் சில சிநேகிதர்களுக்கு யான் விருந்துசெய்வதாகத்தெரிவித் திருந்தேன். இதுவரைக்கும் விருந்துக்குத் தேவையான பதார்த்தங்கள் முதலியன எதுவும் வாங்கவில்லையே. என்ன செய்வது? (என்று விசனத்துடனிருந்தான்.)

தனபாலன்:—உனக்குத் தேவையான வஸ்துக்கள் யாவும் நான் தருகிறேன். நீ க்ஷவரம் மாத்திரம், சீக்கிரம் செய்துவிடுவாய். க்ஷவரம் முடிந்தவுடனே என்னுடன் வீட்டுக்குவா, உனக்குச் சாமான்கள் யாவும் நான் தருகி றேன்.

வாயாடி வம்பன், இதுவும் நமக்கு நல்ல காலந்தானென்று க்ஷவரத்தை சீக்கிரம் செய்து முடித்து, தனபாலனுடன் வீட்டிற்குச்சென்று சுமார் 20 மனிதர்களுக்குப் போதுமான அரிசி, நெய்முதலிய சாமான்களும், பதார்த்தம் முதலியதும் வாங்கிக்கொண்டு வீட்டுக்குச்சென்று தன் வீட்டுக்கு வந்த பெரியவருக்கு விருந்திட்டான்.

---

## அத்தியாயம் 9.

### தனபாலன் சாந்தாவினுல் நற்புத்தியடைதல்.

தனபாலன் வீட்டிற்குச் சென்றதும் ஸ்நானம்செய்து வாசனைத் திரவியங்களை யணிந்து, உயர்ந்த பட்டு வேஷ்டிகளை யுடுத்திக்கொண்டு, உலன் கோட்டு அணிந்து, சரிகை போட்ட வில்வெட்டொப்பியைப் போட்டுக்கொண்டு அதிக விரைவுடன் சாந்தாவின் வீட்டை நாடிச் சென்ருன். வெளியில் போயிருந்த சாந்தாவின் தந்தை வீட்டுக்குத் திரும்பி விட்டபடியால் இனி என்ன செய்வதென்ற ஆலோசனையுடன் அவ்வீட்டுத் திண்ணையின்மேல் உட்கார்ந்தான். சாந்தா அப்பலகணியில் தனபாலனைக் கண்டு இதுவரையில் இவனுக்காக எழுதிவைத்திருந்த ஓர் கடிதத்தைப் பலகணியின் வழியாக தனபாலனிடம் தந்து பலகணியின் கதவுகளைச் சாத்திக்கொண்டனள். உடனே தனபாலன் அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு அதி வேகமாகத் தன் வீட்டுக்குவந்து அதைப் பிரித்துப்பார்த்தான்.

என் பிரிய நண்பா!

"தவமும் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதில்லார் மேற்கொள்வது."

என்றபடி, நீர் அதிக நூல்களை வாசித்தறிந்து அதன் உண்மைகளை நன்ருயறிந்திருக்கிறீர் என்று நான் கேள்விப்பட்ட

துண்டு. பிறமாதரைத் தாயைப்போல் கருதவேண்டுமென் பதை நீதி நூல்கள் கூறியிருப்பதைத் தாங்கள் செவ்வனே யுணர்ந்திருந்தும் இவ்வகைத்தான கடூரமான விஷயங்களில் முயற்சி செய்வது பான்மையன்று. இந்திரன் முனி சிரேஷ்டராகிய கௌதமருடைய மனைவியாகிய அகலிகை யின்மீது விருப்பமுற்றுத் தேகமுழுதும் யோனிக்கண்க ளாக அமையவுரும்படிச் சாபத்தை யேற்றுக்கொண்டான். சந்திரன் ஆசிரியராகிய பிரகஸ்பதியின் மனைவியாரைத் தாயைப்போல் கருதாது அவளது மாயையிற்சிக்கி அல்லல் பட்டனன். திரௌபதியின்மீது காமுற்றவனாகிய கீசகன் பீமனாலே உயிர் துறந்தான். எல்லாம் உணர்ந்தவரென்று வேடத்தைத்தரித்த உனது மனமும், ஒழுக்கமும் நல்வழி யில் நிற்கவில்லை.

"உடலிற் றுவக்கிய வேட முயிர்க்காகா
உடல் கழன்றால் வேடமுடனே கழலும்
உடலுயி ருண்மையென் றோர்ந்துகொள்ளாதார்
கடலிலகப்பட்ட கட்டை யொத்தாரே."

என்றபடி கடலிலகப்பட்ட துரும்பானது அலைகளால் மோதுண்டு கரைகாணாது சுழன்றுழலுதல் போலவே, பிறவிக்கடலிலே இன்பதுன்ப வலைகளால் மோதுண்டு சுழன்று மோக்ஷமாகிய கரையை அடையமாட்டீர்.

நீர் காமநோய்க் கொண்டு திரிவது உசிதமல்ல. அத் தகைய காமநோயின் தன்மை இன்னதென சொல்லமுடி யாது. உலகத்தில் காணப்பட்ட ஒப்பற்ற கள்ளென்றும் காமமென்றும் கொடிய பொருள்கள் இருவகைப்பட்டது. அவற்றுள் ஒன்றாகிய கள் உண்டகாலத்தில் அறிவைப் போக்கும். மற்றொன்றாகிய காமம் மனத்திற்கொண்டகாலை உயிரையுங் கொன்றுவிடும். கள்ளுங் காமமும் உணர்வை யழிக்குந் தன்மையினு லொத்திருக்கின்றது. உண்டபின்

னழிக்குங் கள்ளைப் பார்க்கிலும், நினைத்தவுடனே உயிரை வதைக்கும் காமமே கொடியது.

"காமமே கொலைகட்கெல்லாம் காரணங் கண்ணோடாத
காமமே களவுக்கெல்லாம் காரணம் கூற்ற மஞ்சும்
காமமே கள்ளுண் டற்கும் காரண மாதலாலே
காமமே நரகபூமி காணியைக் கொடுப்ப தென்றான்."

என்றபடி நினைக்கிறவர்க ளனைவரையும் இவ்வுலகத்தி லிருக்குமளவும் அதிக துன்பத்திற்பொருந்தி அதன் பிறகும் கணக்கில்லாத பிறவிக்கடலில் வீழ்த்துமாதலால் நன்மையைத் தராத காமப் பிணியானது விஷத்திலுங் கொடியதாகும். ஆதலால் நண்பா! காமங்கொண்டு கலங்காதே.

"நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்று மரியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வெழுகின்ற புற்றீசல் போலப்
புலபுலென கலகலென புதல்வரைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவட்டுத்தொன் மரத்திடுக்கிற் கானுழைத்துக் கொண்டே
ஆப்பதனைப் பிடித்தசைத்த பேய்க்குரங்கு போல
அகப்பட்டீர் கிடந்துழல வகைப்பட்டீரே."

எனப் பட்டினத்தடிகள் கூறியபடி இச்சமுசார சாகரத்தில் தெரிந்தும் அகப்பட்டு விழிக்க இருக்கிறீர்.

"திட்டையிலே யிருந்து மனத்துற வடைந்த
பெரியோர்க ணிமலன்றனை
கிட்டையிலே தொடுக்குமுத்தி பெருமளவும்
பெரியசுகங் கிடைக்குங் காம
வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்து நடு கட்டையிலே
கிடத்து மட்டும் கவலைதானே."

எனக் கவலையற்றிருக்க வேண்டுமானல் நீர் கொண்டிருக்

கும் காமப்பிணியை முற்றிலும் அகற்றி உம்முடைய மனத்தைத் திடப்படுத்துவீராக. இனிச் சுக துக்கங்களோ வெனில்,

"பாலுக்குச் சர்க்கரையில்லை யென்பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப்போட வுப்பில்லை யென்பார்க்கும் குற்றித்தைத்த
காலுக்குதோற் செருப்பில்லை யென்பார்க்கும் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணையில்லை யென்பார்க்கும் விசனமொன்றே".

என்றபடி, ஏழைமுதல் சீமான் வரையிலும் சுகதுக்கங்கள் சமானமாக விருக்கின்றன. ஆகையால் நீர் இதுவரையில் இருந்ததைப்போல் ஸ்திரீகளை வெறுத்து ஆசையை நீக்கிப் பரமனிடம் பக்தியுட னிருக்கக்கடவீர். முன் கௌசிக முனியின் வேள்வியைக் காத்து, மிதிலையில் சிவனது வில்லை ஒடித்து, சீதையை மணந்து, பரசுராமனை வென்று, வனத்தில் விராதன் தோளைச் சரித்து, கரதூஷணாதியரை அதமாக்கி, மாயமானைக் கொன்று, தடாகையைச் சங்கரித்து, சுபாகுவைக்கொன்று, கவந்தனை மாய்த்து, மராமரத்தைத் துளைத்து, வாலியை வதைத்து, சுக்ரீவனுக்கு அரசளித்து, மகாராட்சதனை மடித்து, கும்பகர்ணனைச் சேதித்து மூலபலத்தை முடித்து, இராவணனாதி இராக்கதரை யெல்லாம் கருவறுத்து, விபீஷணனுக்கு முடி சூட்டிய லோகரட்சகனை ஸ்ரீ ராமமூர்த்தியைச் சதா தியானித்துப் போற்றி செய்திருப்பாயானால் உனக்குற்ற துயரமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி நீர் சுகமடைவீர்." (என்று எழுதி யிருந்தது.)

இதை வாசித்த தனபாலன் அதிக ஆச்சரியப்பட்டு இப்போதனைகளைச் சிரமேற்கொண்டு காமவெகுளி மயக்கத்தை நீக்கிச் சுகமடைந்தான். சுபம். சுபம். சுபம்.

சம்பூர்ணம்.

## ஸ்ரீ கேதாரீஸ்வர விரத மகிமை.

இவ்விரதத்தின் மகிமை இன்னதென்பதையும், அதையநுட்டிக்கும் முறைமையையும் அதனாலடையும் பிரயோஜனத்தையும் தெளிவான பாட்டு உரையுடன் வெளியாக்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை அணா 2.

---

## ஸ்ரீ வேங்கடேசபராக்கிரமம்
அல்லது
## திருப்பதி மான்மியம்

வேங்கடேசப் பெருமானுடைய வைபவங்களையும் அவர் எழுந்தருளியிருக்கும் வேங்கடாசலத்தின் சிறப்புகளையும், அம்மலையின் கண்ணுள்ள தீர்த்தங்களின் பிரபாவங்களும், இதில் விவரித்திருப்பதுடன் நான்கு யுகங்களிலும், விருடபகிரி, சேஷகிரி, அஞ்சனாத்திரி, வேங்கடாசலம் என்ற நான்கு பெயர்கள் உண்டான காரணங்களையும் எடுத்துக் காட்டியுள்ளன. இதன் விலை ரூபா. 1.

## ஸ்ரீ ராமபராக்கிரமம்.

இதில் ஸ்ரீராம பிரானுடைய அனந்த கல்யாண குணங்களை விளக்கி யிருப்பதன்றி அவருடைய முழு சரித்திரத்தையும் அதி சுலபமாக பாலர், பாலிகைகள் முதல் சகலரும் தெரிந்துக் கொள்ளும்வண்ணம் நல்லசெந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 6.

## நவரத்தின ஒப்பாரி.

இது நம் தமிழ் நாட்டு சகோதரிகளுக்கு மிகவும் அவசியமாகிய ஓர் சிறந்த நூல். இதில் தோகையர் துயரமும், மன்மதனுக்கும் ரதிக்கும் நடக்கும் வாக்கு வாதமும், காமனெரிந்தானெரியவில்லை யென்ற சந்தேக நிவர்த்தி லாவணியும் அடங்கியிருக்கின்றன. விலை அணா 5.

## பழனியாண்டவர் பக்திரசக் கீர்த்தனைகள்.

இது பழனி வேலுச்சாமி கவிராயர் அவர்களால் நூதன வர்ணமெட்டுகளமைத்து மதுரம் பழுத்துத் தேன்றுளிக்கும் சந்தச் சுவையுடன் இயற்றப்பட்டிருக்கிறது. விலை அணா 4.

## ஸ்ரீ கைலாசநாதர் பெரியநாயகி அம்பாள் புதிய பக்திரசக் கீர்த்தனை.

இது நூதன பார்ஸி சிங்கார வர்ண மெட்டுகளுடன் பாடப் பெற்ற பல கீர்த்தனங்க ளடங்கியது. இதன் விலை அணா 5.

---

## இல்லறமாலிகா அல்லது குடும்ப பூஷணம்.

இந்துக்கள் கொண்டாடும் ஒவ்வொரு பண்டிகை, விரதம் நோன்பு முதலியவைகளின் காரணங்களும் அவைகளையனுட்டிக்கும் முறையும் மகான்கள் சரித்திரமும் அடங்கியது விலை அ 6.

---

ஸ்ரீ பாரதி புத்தகசாலை, சூளை போஸ்ட், மதராஸ்.

# THE ENGLISH TEACHER

# ஆங்கிலபோதகன்

இதை வாசித்தால் சில மாதங்களில் ஆங்கிலம் எழுதவும் பேசவும் நன்ருய்க் கற்றுக்கொள்ளலாம். இதற்கு உபாத்தியாயர் தேவையில்லை. இதில் ஆங்கில எழுத்துக்களையும், பதங்களையும் தமிழில் உச்சரிக்கும் விதங்களைக்காட்டி ஆங்கில பாஷையிலுள்ள



இரண்டெழுத்துச் சொற்கள் முதல் பலவெழுத்துச் சொற்களையும் விவரித்து அவற்றிற்குச் சரியான தமிழ் உச்சரிப்புக்களையும், தமிழ் அருத்தங்களையும் அவ்வப் பதங்களைக் கொண்ட வாக்கியங்களையும், படிப்படியாக யாவரும் வெகு சுலபமாய்த் தெரிந்து கொள்ளும்படி எழுதப்பட் டிருப்பதுடன் மிருகங்கள், பட்சிகள் வீட்டுச் சாமான்கள், உணவுப் பொருள்கள் குடும்ப விவகாரங்கள், வியாபார விஷயங்கள், தேகாரோக்கியம், சரீரக் கூறுகள், உத்தியோக விஷயம், நீதிஸ்தானம் முதலிய அரசாங்க விவகாரங்கள், சினேக சம்பாஷணைகள், கடிதமெழுதும் முறைகள், கிராமதிசயங்கள், பட்டண வாழ்க்கை, தொழிற் சம்பந்தமான விஷயங்கள், விண்ணப்பங்கள் கலியாண முதலிய சுபலிகிதங்கள், வியாசங்கள், சிறு கதைகள், இன்னும் பிறவிஷயங்களும் சுலபமான நடையில் ஆங்கிலத்திலும் தமிழிலும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இஃது ஆங்கிலம் கற்க அவாவுறும் ஆண்மக்களுக்கும், பெண்டக்களுக்கு மாத்திரமன்றி கிராமதிகாரிகள், கணக்கப் பிள்ளைகள் தோட்டக் கங்காணிகள், கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள், இராணுவ சிப்பாய்கள், வியாபாரிகள், ஐரோப்பியரிடமிருக்கும் தொழிலாளர்கள் முதலிய யாவருக்கும் மிகவும் அவசியமானது.

திக்கு கடிதம் காலிகோ பயிண்டு 832-பக்கங்கள் கொண்ட
பெரிய புத்தகம் 1-க்கு விலை ரூ. 2 0 0

---

எமது விலாசம்:—ஸ்ரீ பாரதி புத்தகசாலை,

சூளை போஸ்ட், மதராஸ்.